# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 15 வெள்ளிக்கிழமை (29-06-2001) UTHAYAN - A Lively National·Tamil Daily கதிர்:215


## நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது 16 ஆம் திகதி முதல் 4 நாள்கள் விவாதம்

### வாக்கெடுப்பு 19 இல் நடைபெறும்

கொழும்பு,ஜூன்29

அரசுக்கு எதிராக ஐ.தே.கட்சி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் அடுத்த மாதம் 16 ஆம் திகதி முதல் நான்கு தினங்கள் இடம்பெறும்; 19 ஆம் திகதி பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படும்.

- இவ்வாறு பதில் ஜனாதிபதியும் பிரதமருமான ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்திருக்கின்றார்.

பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அவர் கலந்துகொண்ட சமய நிகழ்ச்சியிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

பிலியந்தலவில் நடந்த அந்த நிகழ்ச்சியில் பேசுகையில் -

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சகோதரர்கள் நால்வருக்கு மரண தண்டனை

கொழும்பு,ஜூன்29

கல்பிட்டிகம பகுதியில் 1994ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் நான்கு பிள்ளைகளின் தந்தையான ஒருவரைப் படுகொலை செய்த வழக்கில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் நால்வருக்கு குருநாகல் மேல் நிதிமன்ற நீதிபதி பி.லேகம்வாசம் நேற்று மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த - அது

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் பிறந்த தினம்

கொழும்பு,ஜூன்29

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் 56ஆவது பிறந்த தினம் இன்றாகும். (உ-10)

## இளம் விவசாயி சூட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு,ஜூன்29

மட்டக்களப்பு, மண்டூர் பகுதியில் இளம் குடும்பஸ்தரான விவசாயி ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு, பாலமுனையைச் சேர்ந்த ஆறுமுகம் ஆனந்தராசா (வயது 23) என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.

தலையிலும் காலிலும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் காணப்பட்ட இச்சடலம் பொதுமக்களால் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் நேற்றுக்காலை ஒப்படைக்கப்பட்டது.

அதிரடிப்படையினரின் சீருடை அணிந்து வந்த ஆயுததாரிகளே வயலில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் -

அந்த வேளையிலேயே மேற்படி குடும்பஸ்தர் காயமடைந்து பின்பு இறந்திருக்கலாம் எனவும் - அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.(உ-10)

### பத்துத் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு முஸ்தீபு

# வடக்கு - கிழக்கு எங்கும் 6 ஆம் திகதி ஹர்த்தால்

## தமிழ்ப் பெண்களின் மீதான அத்துமீறல்களைக் கண்டித்து

கொழும்பு,ஜூன்29

**தமிழ்ப் பெண்களுக்கு எதிராகப் படையினரும் பொலீஸாரும் மேற்கொண்டு வரும் அத்துமீறல்கள் மற்றும் பாலியல் வல்லுறவுகள் போன்றவற்றைக் கண்டித்து எதிர்வரும் 6 ஆம் திகதி வடக்கு - கிழக்கில் ஹர்த்தாலையும், நாடெங்கிலும் பெரும் எதிர்ப்புப் போராட்டங்களையும் நடத்துவதற்குப் பத்துத் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு நேற்றுக் கூடி முடிவு செய்ததாக அறியவருகின்றது.**

நேற்று மாலை நடந்த இந்தக் கூட்டமைப்பின் கூட்டத்தில், தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதால், அதைத் தடுத்து நிறுத்தும் வகையில் பெரும் போராட்டங்களை நடத்த வேண்டும் என சகலரும் வற்புறுத்தினர். அதன் அடிப்படையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், இன்று நடைபெறும் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் வைத்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என அறியவருகின்றது.

இந்தத் தீர்மானங்களின் படி - எதிர்வரும் 6 ஆம் திகதி வடக்கு - கிழக்கில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும்.

அன்றைய தினம் கொழும்பிலும் மலையகத்திலும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் மற்றும் மறியல் போராட்டங்களை நடத்துவது என்றும் அந்தக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

அதைத் தொடர்ந்து விடாமல் தொடர் போராட்டங்களை நடத்துவது என்றும் அங்கு தீர்மானிக்கப்பட்டதாக அறியவந்தது. (உ-3)

## முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பேரியல் அணி இடைநிறுத்தம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இருந்து அமைச்சர் பேரியல் அஷ்ரப் உட்பட நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை இடைநிறுத்துவது என்று அக்கட்சியின் அரசியல் உயர்பீடம் முடிவுசெய்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு நடந்த உயர்பீடத்தின் கூட்டத்தில் கட்சியின் கட்டுக்கோப்பை மீறியதற்காக அவர்களைக் கட்சியில் இருந்து இடைநிறுத்துவது என்றும் -

அவர்களிடம் விளக்கம் கோருவது என்றும் - முடிவுசெய்யப்பட்டது.

அமைச்சர் பேரியல் அஷ்ரப், யு.எல்.எம்.மொஹிதீன், யு.எல்.எம். ஹனிபா (மருதூர்கனி), விமலவீர திஸநாயக்க ஆகியோரே இடைநிறுத்தப்பட்டவர்களாவர். (உ-3-10)

## தே.ஐ.மு. தலைவராக பேரியல் தொடர்ந்து செயற்பட முயற்சி

கொழும்பு,ஜூன்29

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவராக அமைச்சர் பேரியல் அஷ்ரப் செயற்படுவதற்குக் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்றுமுன்தினம் இடைக்காலத் தடை உத்தரவை வழங்கியிருந்த போதும் -

தமது திட்டப்படி அந்த முன்னணியின் கூட்டம் ஒன்றை தாமே தலைமைதாங்கி அன்று இரவு தமது வீட்டில் அவர் நடத்தியுள்ளார்.

நீதிமன்றத்தின் உத்தரவை நீதிமன்ற ஊழியர் அவரிடம் கையளிக்கச் சென்ற போது அவரின் பாதுகாப்பு அதிகாரிகள் அந்த ஊழியரை திருப்பி அனுப்பி விட்டனராம்.

அதைத் தொடர்ந்து அன்று இரவு தேசிய ஐக்கிய முன்னணியின் கூட்டம் ஒன்றை பேரியல் அஷ்ரப் தமது

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் இருவருக்கு பகிரங்க மரணதண்டனை

மட்டக்களப்பு,ஜூன்29

மட்டக்களப்பு படுவான்கரைப் பகுதியில் விடுதலைப் புலிகளால் இருவருக்கு பகிரங்க மரணதண்டனை வழங்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

பாவற்கொடிச்சேனை, பத்தாம் கட்டைச் சந்தியில் கடந்த செவ்வாய மாலை 4 மணியளவில் இளைஞர் ஒருவருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். கடந்த சில மாதங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளால் பிடிக்கப்பட்டு விசாரணைக்குட்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோல் பவுஸர் வீதியில் வெடித்தது

கொழும்பு,ஜூன்29

வத்தளைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் பெற்றோல் ஏற்றிச்சென்ற பவுஸர் ஒன்று வெடித்துச் சிதறியதில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது.

வீதியில் சென்றுகொண்டிருந்த பவுஸர் திடீரென வெடித்துச் சிதறியதால அந்தப் பகுதியில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது. (உ-3)

## வீரர்கள் புறப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்29

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக 265 மாணவ மாணவியர் யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுத் திருகோணமலைக்கு புறப்பட்டுச் சென்றனர்.

திருகோணமலை செல்லும் வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் பயிற்சியாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோரினது பயண ஒழுங்குகள், உணவு, தங்குமிட வசதிகள் உட்பட அனைத்துச் செலவினங்களையும் பொறுப்பேற்றுக் கொண்ட வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவ

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கோம்பையன்மணல் அருகே இளைஞர் சுட்டுக் கொலை!

யாழ்ப்பாணம்,ஜூன்29

கோம்பையன்மணல் மயானத்துக்கு அருகில் நேற்று மாலை இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சுமார் 25 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞரின் சடலம் மயானத்துக்கு அருகில் பிரதான வீதியோரமாகக் காணப்பட்டதுடன் அருகில் அவரது சைக்கிளும் காணப்பட்டது.

தென்மராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து நவாலியில் வசித்து வந்த இளைஞரே இறந்தவர் எனத் தெரியவருகிறது.

பொலீஸாரினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட மேற்படி நபரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(உ-10)

## ஐம்பது இந்திய மீனவர்களையும் விடுவிக்கக் கோருகிறார் யாழ்.ஆயர்

யாழ்ப்பாணம்,ஜூன்29

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 50 இந்திய மீனவர்களையும் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் மீன்பிடி அமைச்சர் மகிந்த ராஜபக்ஷவிடம் கோரியுள்ளார்.

நேற்று அவருக்கு அனுப்பியுள்ள அவசர 'பக்ஸ்' செய்தியிலேயே இந்தக் கோரிக்கையை ஆயர் விடுத்துள்ளார்.

யாழ்.சிறைச்சாலையில் அவர்களைத் தாம் சந்தித்து உரையாடிய

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பிந்துனுவெவ படுகொலைகள்: சட்டமா அதிபர் அறிக்கை

கொழும்பு,ஜூன்29

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலைகள் தொடர்பான முழு விசாரணை அறிக்கையை சட்டமா அதிபர் கே.ஸி.கமலசபேசன் நேற்று பதுளை மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கைகளின் படி -

43 சந்தேக நபர்களுக்கு எதிராக 83 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இரு நூறு பேர் சாட்சிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மூன்று நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றத்தின் முன்னால் வழக்கு விசாரிக்கப்பட வேண்டும் என்றும் சட்டமா அதிபரின் அறிக்கை கோருகின்றது.

கடந்த ஒக்ரோபர் 25 ஆம் திகதி பிந்துனுவெவ முகாம் தாக்கப்பட்டதில் முகாமிலிருந்த 21 பேர் உயிரிழந்தனர்; 14 பேர் படுகாயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

### பாலியல் சித்திரவதைக்குள்ளான

## இரு பெண்களையும் இடம் மாற்ற உத்தரவு

கொழும்பு,ஜூன்29

பம்பலப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் போது பாலியல் ரீதியான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கூறப்படும் இரு தமிழ்ப் பெண்களையும் அந்தப் பொலீஸ் நிலையத்தில் இருந்து வேறு பொலீஸ் நிலையத்துக்கு மாற்றுமாறு கல்கிசை நீதிவான் நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு ஒன்றின் மீது இடம்பெற்ற விசாரணையின் போதே அவர் இந்த உத்தரவை விடுத்தார்.

பம்பலப்பிட்டிப் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு தமிழ்ப் பெண்களையும் அச்சுறுத்தி பொய் வாக்குமூலம் பெறப்ப

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## கனடா, அமெரிக்காவுக்குள்

# சட்டவிரோதமாக நுழைய முயன்ற 7 ஆயிரம் பேர் இரு வாரங்களில் கைது

## பாரிய ஆள்கடத்தல் தடுப்பு நடவடிக்கையில்

வாஷிங்ரன்,ஜூன்29

கனடா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குள் சட்ட விரோதமாக நுழைய முயன்ற சுமார் 7 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கக் குடியகல்வு மற்றும் குடிவரவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

சட்ட விரோத ஆள் கடத்தல்களை முற்றாகத் தடுக்கும் நோக்குடன், அமெரிக்கா தலைமையில் கனடா மற்றும் 12 லத்தீன் அமெரிக்க நாடுகள் கூட்டாக மேற்கொண்ட நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 4 ஆம் திகதி முதல 20 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட இந்த ஆள் கடத்தல் தடுப்பு நடவடிக்கையில், இலங்கை, இந்தியா, தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த நூறு அதிகாரிகளும் பங்குபற்றினர்.

இந்த நடவடிக்கையின் போது, அமெரிக்கா மற்றும் கனடாவுக்குள் சட்ட விரோதமாக நுழைய முயன்ற 7 ஆயிரத்து 900 பேர் கைது செய்யப்பட்டதாகவும் -

இவர்களைத் தவிர, ஆள்கடத்தல்காரர்கள் மற்றும் சட்டவிரோத ஆவணங்களைத் தயாரித்துக் கொடுப்போர் என சுமார் 75 பேர் பிடிபட்டதாகவும் -

அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேற்கு அரைக் கோளத்தில் உளளடங்கிய மூன்று கண்டங்களில் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய ஆள் கடத்தல் எதிர்ப்பு நடவடிக்கை இது என்று கூறப்படுகிறது.

(உ-ஒ-10)

## பாதுகாப்புப் பிரிவு ஊழியர் திருட்டுச் சம்பவத்தில் சிக்கினார்

யாழ்ப்பாணம்,ஜூன்29

யாழ்.ஆஸ்பத்திரியில் நேற்றுமுன் தினம் இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் பற்றரி திருட்டுத் தொடர்பாக பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த பாதுகாவலர் ஒருவர் பாதுகாப்புப் பிரிவுப் பொறுப்பாளரிடம் வகையாக மாட்டிக் கொண்டார்.

ஆஸ்பத்திரியில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றில் இருந்து பற்றரி திருடப்பட்டமை குறித்து அந்த மோட்டார் சைக்கிள் உரிமையாளர் பாதுகாப்புப் பிரிவுப் பொறுப்பாளருக்கு முறையிட்டார்.

அதைத் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்ட பொறுப்பதிகாரி பிரஸ்தாப பாதுகாவலரையும் கடும் விசாரணைக்கு உட்படுத்தி காணாமல் போன பற்றரியை மீட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விசாரணைகளின் போது - கடந்த 28 ஆம் திகதி ஆஸ்பத்திரியில் நிறுத்தப்பட்டிருந்த டாக்டர் ஒருவ்ரின் மோட்டார் சைக்கிளில் இருந்து பற்றரி ஒன்றைத் தாம் திருடியதாகவும் அவர் ஒப்புக் கொண்டதாகக் கூறப்படுகின்றது.

பிரஸ்தாப நபர் மேலதிக விசாரணைக்காக பாதுகாவலர் நிறுவனத்தினால் யாழ்.பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (உ-3)

## சென்றலைட்ஸ் உறுப்பினர்களுக்கு!

யாழ்ப்பாணம்,ஜூன்29

யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் மிக முக்கியமான விடயங்கள் குறித்துக் கலந்துரையாடுவதற்காக இன்று மாலை 5 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் அவசரக் கூட்டம் ஒன்றிற்கு தவறாது சமுகம் தருமாறு கல்லூரி அதிபரும் கழகப் போஷகருமான க.இராசதுரை கேட்டிருக்கின்றார்.

(உ)

## வடக்கு - கிழக்கு மாகாண

# மேசைப்பந்தாட்ட அணிக்கு யாழ்.வீராங்கனைகள் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூன்29

வடக்கு - கிழக்கு மாகாண மேசைப்பந்தாட்ட பெண்கள் அணிக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து 4 வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஐவரைக் கொண்ட இந்த அணியில் நால்வர் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எஸ்.ஸ்ரீமைதிலி, எஸ்.சுகந்தினி, எஸ்.பானுரேகா, பி.கயல்விழி ஆகியோரே அணியில் இடம்பெறும் யாழ். வீராங்கனைகள் ஆவர்.

இந்த அணிக்குத் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த வராங்கனை ஒருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை இம்மாதம் திருகோணமலையில் நடைபெற்ற வடகக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்டங்களுக்கிடையிலான மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பெண்கள் பிரிவில் யாழ். மாவட்ட அணி சம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு - கிழக்கு மாகாண மேசைப்பந்தாட்ட ஆண்கள் அணிக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து ஜே.மோகன், ஆர்.சுகந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (உ-4)

# மாயமான வவுனியா மாணவிகள் மட்டக்களப்பில் கண்டுபிடிப்பு!

கொழும்பு,ஜூன்29

வவுனியாவில் கடந்த திங்கட்கிழமை கல்லூரிக்குச் சென்ற சமயம் காணாமல் போனதாகக் கூறப்பட்ட மூன்று மாணவிகளும் நேற்று மட்டக்களப்பில் கண்டுபிடிக்கப்பட்டனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் காணாமல் போயிருந்த இந்த மாணவிகளைத் தேடிக் கண்டு பிடித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

காணாமல் போன மாணவிகள் தொடர்பாக நடத்தப்பட்ட முதல் கட்ட விசாரணையின் போது அவர்கள் மூவரும், பஸ் ஒன்றில் மட்டக்களப்பு நோக்கிச் சென்றது தெரிய வந்ததாகவும் -

அதனைத் தொடர்ந்து மட்டக்களப்புப் பகுதியில் தேடிய போதே மாணவிகள் மூவரும் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை பாடசாலைக்கு புறப்பட்டுச் சென்று, பின்னர் வீடு திரும்பாத சகோதரிகளான கிருஷ்ணபிள்ளை டிலீஸா (வயது 12), கிருபாலினி (வயது 14) மற்றும் ஜெயகாந்தன் தர்ஷிகா (வயது 12) ஆகியோரே தற்போது மட்டக்களப்பில் கண்டுபிடிக்கப்பட்டவர்களாவர். உ-ஒ-10)

## தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம்,ஜூன்29

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு நேற்று வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 212 தபால பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 40 தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(உ-6)

# சிவமகாராசா எம்.பியின் சேவைநலன் பாராட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்29

கூட்டுறவாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சின்னத்தம்பி சிவமகாராசாவின் சேவைநலன் பாராட்டு விழாவும் கூட்டுறவுத்தீபம் சிறப்புமலர் வெளியீடும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்க விழா மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ச.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினர்களாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா மற்றும் யாழ். அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

ஆசியுரைகளை மாவை ஆதீனகர்த்தா க.து.சண்முகநாதக்குருக்கள், நகுலேஸ்வர ஆதீனகர்த்தா சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்கள், ஸ்ரீதுர்க்கா தேவஸ்தானத் தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி அதிபர் அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆகியோர் நிகழ்த்துவர்.

பாராட்டுரைகளை வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி பா.ஸ்ரீபாஸ்கரன், மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், யாழ். மாநகர மேயர் என்.ரவிராஜ், வலி. வடக்குப் பிரதேச செயலாளர் திருமதி ப.திலகநாயகம் போல், யாழ்.கூட்டுறவு உதவி ஆணையாளர் கு.சண்முகநாதன், யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி, கூட்டுறவு விரிவுரையாளர் ஆர்.எம்.நாகலிங்கம், பொதுமுகாமையாளர் செ. செல்வராசா, மாவட்டக் கூட்டுறவுச் சபை செயலாளர் க.சிவசுப்பிரமணியம், தெல்லிப்பழை கலை இலக்கிய களச் செயலாளர் கோகிலா மகேந்திரனும் வழங்கவுள்ளனர்.

கூட்டுறவுத் தீபம் சிறப்பு மலர் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக் கழக பட்ட மேற்படிப்பு பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸும்; ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் - சமூகவியல் துறைத் தலைவர் கலாநிதி என்.சண்முகலிங்கனும் வழங்கவுள்ளார்கள். (க-86)

## உளவியல் நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்29

யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 'யுனிசெப்' நிறுவனத்தின் அனுசரணையுடன் குழநதை உளவியல் நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 4 மணிக்கு மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் மரியதாசன் நிகழ்த்தவுள்ளார்.

கருத்துரைகளை பிரதி முதலவர் செ.கந்தையன், சபையின் சுகாதாரக் குழுத் தலைவர் செல்லையா விஜயரட்ணம் ஆகியோரும், வெளியீட்டுரையை மாநகர முதல்வர் ந.ரவிராஜும், மதிப்புரையை யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரனும், ஏற்புரையை நூலாசிரியர் கலாநிதி சபா ஜெயராசாவும் நிகழ்த்தவுள்ளனர்.

(உ-5-4)

## மற்றொருவரும் காயம்

தென்மராட்சி,ஜூன்29

மண்டான் பகுதியில் உள்ள வீடுகளைப் பார்க்கச் சென்ற வேளையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை படையினரால் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு தாக்குதலுக்கு இலக்கானதாகக் கூறப்படும் மேலும் ஒருவர் நேற்றுமுன்தினம் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலின் போது கைவிரல் முறிந்த நிலையிலும், கால் எலும்பு வெடிப்பு ஏற்பட்ட நிலையிலும் ஆஸ்பத்திரியில் இவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

கரணவாய் வடக்கைச் சேர்ந்த சுந்தரம் ஜெயராசா (வயது 32) என்பவரே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவர். இவருடன் தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்த - இதே இடத்தைச் சேர்ந்த - சித்தன் குலவீரசிங்கம் (வயது 31) தனியார் வைத்திய நிலையமொன்றில் சிகிசசை பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. அன்றையதினம் மண்டான் பகுதியில் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த மேலும நால்வர் மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருவது தெரிந்ததே.

(உ-117)

## புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் விடைகள்

நேற்று வெளியான ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல.I இல் பிரசுரமான வினாக்களுக்கான விடைகள் வருமாறு:-

**பகுதி I**

(1) 2 (2) 3 (3) 2 (4) 3 (5) 3
(6) 2 (7) 3 (8) 1 (9) 2 (10) 1
(11) 1 (12) 2 (13) 2 (14) x
(15) ✓ (16) 0 (17) ✓ (18) 3
(19) 2 (20) 1 (21) கணிதம்
(22) உடற்கல்வி, ஆங்கிலம்
(23) சுருதிகா (24) அழகியல்
(25) 8 (26) 14 (27) 8 (28) 2
(29) 2 (30) 3 (31) 3 (32) 2
(33) 2 (34) 1 (35) 4 (36) 1
(37) 5 (38) 4 (39) 3 (40) 2

**பகுதி 2**

(1) காலைக்காட்சி
(2) நிகழ்காலத்தில்
(3) விண்மீன்களின்
(4) வைரத்தை (5) விரிகின்றது
(6) பூக்கள் (7) கமலம், அம்புஜம்
(8) இருள் (9) மேற்கு
(10) மெல்ல மெல்ல
(11) "சூரிய பகவானே வருக"
(12) சூரியன், தாமரை
(13) முகம்+மலர்ந்து
(14) முகில்+கூட்டம்
(15) SUN (16) SKY
(17) FLOWERS (18) LOTUS
(19) குணசிங்கம் வினோதன்
(20) தயாழினி, கிருசாந்தினி
(21) மாசி (22) 1995
(23) 28 (24) வெள்ளிக்கிழமை
(25) அம்மா (26) பிறந்தநாள்
(27) நண்பர்கள் (28) பத்தாவது
(29) வயலின் (30) பல்வலி
(31) கங்காரு (32) காற்றடித்த பந்து
(33) வெப்பசக்தி (34) 16 (35) 7
(36) 8 (37) 952 (38) மு.ப. 9.15
(39) கோவா, கரட்
(40) தேயிலை, இறப்பர்
(41) திராட்சை, கொடித்தோடை
(42) கராம்பு, சாதிக்காய்
(43) சவுக்கு, நிழல்வாகை
(44) குறோட்டன்,அந்தூரியம்
(45) 4 (46) 5 (47) 1 (48) 3
(49) 2 (50) 2 (51) 1 (52) 4
(53) 3 (54) 5
(55) அல்லி (56) தேனை
(57) மல்லிகை (58) நாகமரம்
(59) 11பேர்
(60) இலகுவாய் நிற்றல்
(61) தொடர்பு சாதனங்கள்
(62) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
(63) (வரைபில் உரிய இடத்தை நிரற்றுதல் வேண்டும்.)
(64) தரம்1, தரம்5
(65) 25பேர் (66) 345ரூபா
(67) 1080 பிஸ்கட்
(68) 24 பேர் (69) 47 பேர்
(70) kg (71) g.(72) ml
(73) cm (74) km
(75)-(80) பொருத்தமான வசனங்கள்.


திருமறைக் கலாமன்றம் நடத்தும்
கலை நிலா அரங்கு
(மாதாந்த அரங்க நிகழ்வு)
நாள் : நாளை (30.06.2001) சனிக்கிழமை
நேரம் : மாலை 6.15 மணி
இடம் : மன்ற அரங்கு
நிகழ்ச்சிகள்
☆ நடனங்கள் ☆ குழுப்பாடல் ☆ கிற்றார் இசை
சிறப்பு நிகழ்ச்சி
"ஏகலைவன்" நாட்டுக்கூத்து
பிரவேசம்: இலவசம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
238,பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
- திருமறைக் கலாமன்றம்.
தொலைபேசி - 021 - 2393
(C/17254)

பழைய படம்
(90 க்கு முதல் வெளிவந்தவை)
திரைப்படக் கசற் விற்பனைக்கு
(1000 கசற் வரை உண்டு.
Master Copy உட்பட)
மொத்தமாகப் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
28/1, சோமசுந்தரம் லேன், சுண்டிக்குளி.
(89573)

NEW SCIENCE COLLEGE JAFFNA
PAPER CLASS (2002)
பௌதிகவியல்
M.KARUNANITHY
பிரிவு - II
SAT / SUN - 3.00 - 4.00
ஆரம்பம்: நாளை (30/06/2001) சனி
பிரிவு - I TUE., THU., - 6.15- 7.15
(89556) (நடைபெறுகின்றன)

BRIGHTMAN
கல்வி நிலையம்
பிறவுண் வீதி, யாழ்நகர்.
A/L 2003 LOGIC
☆எடுப்பு☆ ☆அனுமானம்☆
By:- ரகுமார் B.A.
(தனி ஒருபாட அனுமதி வழங்கப்படும்)
ஆரம்பம்:- 30/06/2001 SAT - 3.00 p.m.
(89546)

கொழும்புத்துறை
பரிசுத்த செபமாலை மாதா திருவிழா
யாழ்.கொழும்புத்துறைப் பதியில் மருதமடு அன்னையின் திருநாமம் கொண்ட திருநாள் திருப்பலி வழமைபோல் ஆடி மாதம் 2 ஆம் திகதி (02-07-2001) திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.
இத்திருவிழா நாளை (30-06-2001) சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திருப்பலியுடன் ஆரம்பமாகிறது. திருவிழா ஆயத்தங்களை பங்குத்தந்தை மேற்கொண்டுள்ளார்.
அன்னையின் அருளாசி பெற அன்புடன் அழைக்கின்றீர்கள்.
(C/17255) - பங்குத்தந்தை, பங்குமக்கள்.



புனித பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் முன்னாள் சோவியத் ஒன்றிய நாடான உக்ரேனுக்கான தனது ஐந்து நாள் விஜயத்தின் இறுதியில் நடத்திய மாபெரும் பிரார்த்தனைக் கூட்டத்தின் காட்சிகள். சுமார் 10 லட்சம் பேர் பாப்பரசரின் பிரார்த்தனையில் பங்குபற்றினர். (ஐ)

### இஸ்ரேலியத் தடைகளினால்

# பலஸ்தீனத்துக்குத் தினமும் ஒரு கோடி டொலர் நஷ்டம்!

ஜெருசலேம்,ஜூன்29

மேற்குக்கரை மற்றும் காஸாப் பள்ளத்தாக்கு ஆகிய பகுதிகளை இஸ்ரேல் மூடிவைத்துள்ளதனால் பலஸ்தீனத்துக்கு நாள் ஒன்றுக்கு ஒரு கோடி டொலர் வருமான இழப்பு ஏற்பட்டுவருகின்றது.

1993ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒஸ்லோ உடன்படிக்கையின் பின்னர் ஏற்பட்ட மிக மோசமான நிலை இது என மத்திய கிழக்குக்கான ஐ.நாவின் விசேட இணைப்பாளர் பொஸன் தெரிவித்தார்.

காஸா பள்ளத்தாக்குப்' பகுதியில் 60 வீதமான பலஸ்தீனர்களும் மேற்குக்கரையில் 40 வீதமான பலஸ்தீனர்களும் எந்தத் தொழிலும் இல்லாத அநாதரவான நிலையில் இருக்கிறார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

பலஸ்தீனர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் அதாவது 10 லட்சம் பேர் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்கிறார்கள் இவர்களது நாளாந்த வருமானம் இரண்டு டொலர்களுக்கும் குறைவானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

### உலக அரங்கில்

ஐந்து மாதங்களுக்கு முன்னர் மத்திய கிழக்கில் மீண்டும் மோதல்கள் ஏற்படுவதற்கு முன்பு இஸ்ரேலியப் பகுதிகளில் ஒரு லட்சத்து 30 ஆயிரம், பலஸ்தீனர்கள் தொழில் புரிந்துவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

### இன ஒழிப்புக் குற்ற விசாரணைக்கு

# மிலோசெவிக்கை நீதிமன்றத்திடம் கையளிக்க ஆரம்ப நடவடிக்கை

பெல்கிரேட்,ஜூன்29

யூகோஸ்லாவியாவின் முன்னாள் ஜனாதிபதி சொலபொடான் மிலோசெவிக்கை ஹேக்கில் உள்ள சர்வதேச நீதிமன்றத்திடம் கையளிக்க ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கான உத்தியோகபூர்வ கோரிக்கையை யூகோஸ்லாவிய நிதியமைச்சர் மொம்சிலோ கருபாக் பெல்கிரேட் நீதிமன்றத்திடம் விடுத்துள்ளார்.

கொசோவாவில் உள்ள அல்பேனியர்கள் மீது 1995-99ஆம் ஆண்டுகளில் செர்பியப் படையினர் மேற்கொண்ட இனஒழிப்பு நடவடிக்கைகள் மிலோசெவிக்கின் ஆதரவுடன் நிகழ்ந்ததாகக் கருதப்படுகிறது.

இந்த இனஒழிப்பு நடவடிக்கைக்காகவே ஹேக் நீதிமன்றம் மிலோசெவிக்கை விசாரிக்க உள்ளது. (ஒ)

# மிலோசெவிக்குக்கு ஆதரவாக பெல்கிரேட்டில் ஆர்ப்பாட்டம்

### பத்தாயிரம் பேர் ஒன்று கூடினர்

பெல்கிரேட்,ஜூன்29

யூக்கோஸ்லாவிய முன்னாள் ஜனாதிபதி மிலோசெவிக் யுத்தக் குற்ற விசாரணைக்காக ஹெகில் உள்ள சர்வதேச நீதிமன்றிடம் கையளிக்கப்படுவதை ஆட்சேபித்து ஆயிரக்கணக்கான அவரது ஆதரவாளர்கள் பெல்கிரேட்டில் உள்ள நாடாளுமன்றத்துக்கு வெளியே கூடினர்.

மத்திய பெல்கிரேட் வழியாக நாடாளுமன்றப் பகுதிக்கு வந்த சுமார் 10 ஆயிரம் பேருக்கும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த கலகம் அடக்கும் பொலீஸாருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது.

மிலோசெவிக்கை ஒப்படைக்கவிடப்போவதில்லை என இவர்கள் முழக்கம் இட்டனர். ஆர்ப் பாட்டக்காரர்களுடன் வந்த - மிலோசெவிக்குக்கு ஆதரவான- சோஷலிஸக் கட்சியின் பல பிரதிநிதிகளை பிரதமர் ஸோரான் நாடாளுமன்ற கட்டடத்தில் வைத்து வரவேற்றார்.

யூக்கோஸ்லாவியப் பிரஜைகள் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றிடம் கையளிக்கப்படுவதற்கு மேற்படி சோஷலிஸக் கட்சி எதிர்ப்புத் தெரிவிக்கிறது. பிரதமர் ஸோரான் இக் கட்சியின் ஓர் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கட்சியின் பிரதிநிதிகள் ஜனாதிபதி வோஜிஸ்லேவ் கொஸ்டியூனிக்காவைச் சந்திக்கப்போவதாகக் கூறியதை அடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

மிலோசெவிக்கை விசாரணைக்காக சர்வதேச நீதிமன்றிடம் ஒப்படைப்பது அரசமைப்புக்கு முரணானது என மிலோசெவிக் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர். (உ)

### ஜெயலலிதாவுக்கு எதிரான வழக்குகளை விசாரிக்கும்

# தனி நீதிமன்றங்களின் காலம் மேலும் ஒரு வருடத்துக்கு நீடிப்பு

சென்னை,ஜூன்29

தமிழகத்தில் கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் ஜெயலலிதா மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க வென நியமிக்கப்பட்ட தனி நீதிமன்றங்களின் காலம் மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

தி.மு.க. ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட இந்தத் தனி நீதிமன்றங்களின் ஆயுள்காலம் இன்னும் சில நாள்களில் முடிவடைய உள்ளது.எனவே அதன் காலஎல்லை முடிவடைந்ததும் வழக்குகள் அனைத்தையும் தற்போதைய முதல்வர் ஜெயலலிதா சாதாரண நீதிமன்றங்களுக்கு மாற்றிவிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் வழக்குகள் அனைத்தும் தொடர்ந்து தனி நீதிமன்றங்களிலேயே விசாரிக்கப்படும் என்றும் -

வழமைபோலவே அதன் பதவிக் காலம் மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்படும் எனவும்-

செய்தியாளரிடம் பேசிய ஜெயலலிதா தெரிவித்தார்:

ஜெயலலிதாவின் இந்த முடிவு குறித்து அரசியல் அவதானிகள் பெரும் வியப்புத் தெரிவித்துள்ளனர். (ம)

# மத்திய கிழக்கில் தலைவர்களுடன் அமெ. ராஜாங்க அமைச்சர் பேச்சு

அமெரிக்காவின் ராஜாங்க அமைச்சர் கொலின் பவல் மத்திய கிழக்கிற்குச் சென்றார். இவர் மேற்குக் கரையில் பலஸ்தீனத் தலைவரைச் சந்தித்துப் பேசுவார். அதன் பின்பு இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோனுடன் கலந்துரையாடுவார் என அறிவிக்கப்படுகிறது.

இஸ்ரேல் பலஸ்தீனம் ஆகிய இரண்டு நாடுகளுக்கும் இடையில் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளும் வரையிலான யுத்தநிறுத்தம் அமுல்படுத்தப்படல் வேண்டும் என்று கொலின் பவல் தெரிவித்தார்.

மிச்சேல் தீர்வுத் திட்டத்தின் முதற்கட்டமாக பத்து நாள்களுக்கு யுத்தநிறுத்தம் செய்யவேண்டும் என ஷெரோன் கூறியமை குறிப்பிடத்தக்கது.

பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் மீது இஸ்ரேலியர்களும் பலஸ்தீனர்களும் குற்றஞ்சாட்டுகின்றனர். மத்திய கிழக்கில் நடைபெறும் வன்முறைகளுக்கு அரபாத்தான் காரணம் என இஸ்ரேல் கூறுகிறது. இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கைகளில் அரபாத் காட்டும் ஆர்வம் போதாது. பலஸ்தீனர்கள் இவ்வாறு குற்றஞ்சாட்டுகின்றனர். (ம)

# சாள்ஸ் - கமீலா பகிரங்க முத்தம்

லண்டன்,ஜூன்29

பிரிட்டிஷ் முடிக்குரிய இளவரசர் சாள்ஸும் அவரது காதலி கமீலா பார்க்கர் பவுல்ஸும் முதல் தடவையாக பகிரங்கமாக முத்தமிட்டுக் கொண்டனர்.

லண்டனில் நிதி சேகரிப்பு விருந்து ஒன்றில் இடம்பெற்ற அவர்களின் முத்தக்காட்சி தொலைக்காட்சியிலும் பத்திரிகைகளின் முதல் பக்கங்களிலும் பிரபலம் பெற்றுள்ளன.

இந்த உதவி நிதிக்கான விருந்தை கமீலா ஏற்பாடு செய்திருந்தார்; சாள்ஸ் அதற்கு உதவியாக இருந்தார்.

எலிசபெத் மகாராணிக்குப் பின் முடிக்குரிய இளவரசரான சாள்ஸின் கன்னத்தில் பகிரங்கமாக முத்தமிட்டுள்ளவர் கமீலா பார்க்கரே. கமீலா முத்தமிட்டு வரவேற்ற போது பதிலுக்கு சாள்ஸ் கமீலாவின் இரு கன்னங்களிலும் லேசாக முத்தமிட்டார்.

விவாகரத்துச் செய்த கமீலாவுடனான தனது காதலைப் பகிரங்கமாக்கவும் மக்கள் அதனை ஏற்கும்படி செய்யவுமே இந்த முத்தங்களை அவர் அளித்திருப்பதாகக் கருதப்படுகிறது. (ம)

# மற்றுமொரு இராணுவச் சதிப்புரட்சி பாகிஸ்தானில் ஏற்படும் சாத்தியம்

### படைத்தரப்பில் அமெரிக்க - சீன ஆதரவுக் குழுக்கள் மல்லுக்கட்டுகின்றன

வாஷிங்டன்,ஜூன்29

பாகிஸ்தானில் இந்த ஆண்டிற்குள் இன்னுமொரு சதிப்புரட்சி நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாகவும் -

தற்போது ஜனாதிபதியாகியுள்ள இராணுவ ஆட்சியாளர் முஷாரப்பைப் பதவி கவிழ்த்துவிட்டு இராணுவத்தின் பிரதி தளபதி லெப்டினன்ட் ஜெனரல் உஸ்மானி ஆட்சியைப் பிடிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானிய இராணுவத்திற்குள் உள்ள அமெரிக்க - சீனச் சார்புக் குழுக்களுக்கிடையிலான போட்டியே இன்னுமொரு சதிப்புரட்சிக்கு வித்திடலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தானில் அரை நூற்றாண்டு காலமாக ஆதிக்கம் மிக்க சக்தியாக விளங்குகின்ற இராணுவத்திற்குள் சீனா - சார்புக் குழுவொன்றின் பலம் அதிகரித்து வருகின்றது. இந்தக் குழுவினர் தற்போது அதிகாரம் செலுத்தி வருவதாகவும், அமெரிக்க சார்புக் குழுவினரை வெளியேற்றும் முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியும் இராணுவ ஆட்சியாளருமான முஷாரப் அமெரிக்க சார்பு போக்கைக் கடைப்பிடிப்பதாகக் கருத்துக்கள் நிலவுகின்றன.

பாகிஸ்தான் இராணுவத்தின் பிரதித் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் உஸ்மானி உளவுப் பிரிவின் தலைவர் (ஐ.எஸ்.ஐ) லெப்டினன்ட் ஜெனரல் மஹ்முட் அஹமட் போன்றவர்கள் சீனச்சார்பைக் கடைப்பிடிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் முஷாரப் வாஷிங்டனின் ஏவலாளராகச் செயற்படமுயல்வதாகவும், அவர் இந்தியாவின் பக்கம் சாயத் தொடங்கியுள்ளதாகவும் கருதுகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

சீனச் சார்புக் குழுவினர் சமீபத்தில் அமெரிக்க சார்புக் குழுவைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகளுக்கு பதவியுயர்வு கிடைப்பதைத் தடுத்து நிறுத்தியுள்ளதுடன், அந்தப் பதவிகளைத் தாங்கள் கைப்பற்றியுள்ளனர்.

இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்கும் இது அச்சத்தை ஏற்படுத்தக் கூடிய செய்தி எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சீனச்சார்பு இராணுவ அதிகாரிகள் பொதுவாகக் காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு ஆதரவாளர்கள் எனவும், இந்தியாவைத் தோற்கடிப்பதற்காக தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனக் கருதுபவர்கள் எனவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சீனச்சார்பு இராணுவ அதிகாரிகள் பலரின் பதவிக் காலம் அடுத்த வருடம் முடிவடைவதாகவும், இதன் காரணமாக இவர்களுக்குப் பதில் அமெரிக்க சார்பு அதிகாரிகளை நியமிக்கக் கூடிய வாய்ப்பு முஷாரப்பிற்கு உள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும், இதற்கு பாகிஸ்தான் ஜிகாத் அமைப்புகள் காட்டக் கூடிய எதிர்ப்பைச் சமாளிக்கும் திறமை முஷாரப்பிற்கு உள்ளதா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது.

இதனால், பல ஆய்வாளர்கள் இவ்வருட இறுதிக்குள் இன்னுமொரு சதிப்புரட்சி நிகழலாம் எனவும் முஷாரப்பைக் கவிழ்த்துவிட்டு உஸ்மானி பதவிக்கு வருவார் எனவும் தெரிவித்துள்ளனர். இராணுவத்திற்குள் உள்ள முஷாரப்புக்கு எதிரான சக்திகளை அணிதிரட்டுவதில் சிலர் ஈடுபட்டுள்ளதாகவும், முஷாரப் தன்னைப் பலப்படுத்துவதற்கு முன்னர் அவரைப் பதவி கவிழ்த்துவிட அவர்கள் முயல்வதாகவும் கூறப்படுகின்றது.

முஷாரப்பிற்கு எதிரான சதிப்புரட்சி குறித்த அச்சம் காரணமாகவே அவரைப் பேச்சுவார்த்தைகளுக்கு அழைக்குமாறு அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் புதுடில்லியைக் கேட்டுக் கொண்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான வெற்றிகரமான உச்சிமாநாடு, இஸ்லாமாபாத்தில் முஷாரப்பின் நிலையைப் பலப்படுத்தும் என அமெரிக்கா எதிர்பார்க்கின்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மாநாடு வெற்றிகரமாக முடிவதற்கு எந்த இந்தியப் பிரதமரும் செய்யாத விட்டுக்கொடுப்புகள் சிலவற்றை இந்தியப் பிரதமர் வாஜ்பாய் செய்ய வேண்டியிருக்கும் எனவும் -

பாகிஸ்தானைக் [illegible] காக இந்தியா [illegible] யிருப்பதாகவும் வேறு வட்டார[illegible] தெரிவித்தன.

இதனிடையே -

அமெரிக்காவின் அழுத்தம் காரணமாகவே, பாகிஸ்தானுடன் நேரடிப் பேச்சு நடத்தும் நிலைப்பாட்டுக்கு புதுடில்லி இணங்கிப்போனதாக இந்தியப் பத்திரிகைகள் சிலவற்றில் வெளியான செய்திகளை இந்திய அரசு மறுத்துள்ளது.

தற்போதைய நிலைமைகளை ஆய்வு செய்த பின்னர், இந்திய அரசு அத்தகைய ஒரு முடிவை எடுத்ததாக இந்திய அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## வீடுகளைப் பார்வையிடச் சென்றவேளை

# மட்டுவில் பகுதி மக்கள் எடுத்துவந்த பொருள்கள் படையினர் தடுத்துவைப்பு

சாவகச்சேரி, ஜூன் 29

மட்டுவில்–சரசாலைப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது வீடுகளைச் சென்று பார்வையிட கடந்த 15 ஆம் திகதி முதல் படையினர் அனுமதி வழங்கி உள்ளனர். ஆனால் வீடுகளைப் பார்வையிட்டுத் திரும்புவோர் அங்கிருந்து பொருள்களை எடுத்து வருவதைப் படையினர் தடுத்துள்ளனர்.

கடந்த சில நாள்களாக வீடுகளைப் பார்வையிடச் சென்ற பலர் தமது இருப்பிடங்களில் எஞ்சிக்கிடந்த ஒரு சில பொருள்களைத் தம்முடன் எடுத்து வந்த போதும் சரசாலை சோதனைச் சாவடிக்கு அப்பால் அவற்றை எடுத்துச் செல்லப் படையினர் அனுமதிக்கவில்லை. இதனால் பலர் ஏமாற்றத்துடன் திரும்பி வந்ததைக் காணமுடிந்தது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஏற்பட்ட பெரும் யுத்தத்தினால் மட்டுவில், சரசாலைப் பகுதியில் பலத்த சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வீடுகள் பலவும் அழிவுண்டுள்ளன. வீடுகளில் இருந்த உடைமைகள் அழிந்துள்ளன. எஞ்சியவை திருடர்களால் சூறையாடப்பட்டுவிட்டதாக மக்கள் தெரிவித்தனர்.

வீடுகளைப் பார்க்கச் சென்ற பலரும் அங்கு தமது உடைமைகள் அழிவுண்டு கிடப்பது கண்டு அதிர்ச்சியடைந்தனர். வீடுகளில் எஞ்சிக்கிடந்த தளபாடங்கள் கதவுகள், ஜன்னல்கள், மரப் பலகைகள், சில மின்சாரப் பொருள்களைப் பலரும் சுமந்து கொண்டு திரும்பினர் ஆனால் சரசாலை சோதனைச் சாவடியில் அவற்றைப் பறிமுதல் செய்த படையினர் அவற்றை அங்கு ஓரிடத்தில் குவித்து வைத்தனர். (ஐ-31)

## பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடத்தும் ஜி. சீ. ஈ. உயர்தர கலை, வர்த்தக மாணவர்களுக்கான பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நாளை காலை 9 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை கணக்கியல், பொருளியல், வர்த்தகம் ஆகிய பாடங்களும், நாளை மறுதினம் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை தமிழ் இந்துசமயம், அளவையியல் ஆகிய பாடங்களும் நடைபெறவுள்ளன.

இந்தக் கருத்தரங்கில் பங்கு கொள்ளும் மாணவர்களுக்கு இலவசக் கையேடுகளும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-4)

## சபாநாயகர் இந்தியா விஜயம்

கொழும்பு, ஜூன் 29

நாடாளுமன்றச் சபாநாயகர் அநுரா பண்டாரநாயக்க 5 நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு புதன்கிழமை இந்தியா சென்றிருக்கிறார்.

இந்திய நாடாளுமன்றத்தின் லோகசபை சபாநாயகர் பாலயோகியுடன் பேச்சுக்களை நடத்தவிருக்கும் பண்டாரநாயக்க, வட இந்திய சண்டிகாரில் மாநில சட்டசபையின் வைபவம் ஒன்றிலும் கலந்து கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க

## லஞ்சம் பெற்ற கான்ஸ்டபிள் கைதானார்

கொழும்பு, ஜூன் 29

குருநாகல் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவர் கசிப்பு வியாபாரி ஒருவரிடம் இருந்து 15 ஆயிரம் ரூபாவை லஞ்சமாகப் பெற்றபோது லஞ்ச ஊழல் ஒழிப்பு அதிகாரிகளிடம் வசமாக மாட்டினார் எனக் கூறப்படுகிறது,

லஞ்ச ஊழல்அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலொன்றை அடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை இவர் குருநாகல் ஹோட்டலொன்றில் இருந்து கைது செய்யப்பட்டார்.

கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் நபர் ஒருவரின் நடவடிக்கைகளில் பொலீஸ் தலையிடாது இருக்கவே இந்தப் பணத்தைப் பெற முனைந்துள்ளார்.

தரகர் ஒருவர் மூலம் பேரம் பேசி சந்தேக நபரை ஹோட்டலுக்கு அழைத்து பணத்தைச் சுருட்டத் திட்டமிட்ட வேளையில் அங்கு சென்ற மூன்று அதிகாரிகள் இவரைக் கைது செய்துள்ளனர்.

இதுவரை குருநாகலில் இரண்டுபொலீஸாரும் தேசிய ரீதியில் எட்டுப் பொலீஸாரும் லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக லஞ்ச ஊழல் ஒழிப்புத் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். (க)

## பாலர் பாடசாலை விளையாட்டு விழா

யாழ்ப்பாணம் கந்தர்மடம் ஞானக்குழந்தை இல்லப் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை விளையாட்டு மைதானத்தில் பாலர் பாடசாலை ஆசிரியை பா. கிருஷாந்தினி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி பா. தனபாலனும், சிறப்பு விருந்தினர்களாக பாலர் கல்விக்கழகத் தலைவர் இ. தவகோபால், பாலர் கல்விக்கழகச் செயலாளர் திருமதி தெ. றெட்ணகோபால் ஆகியோரும் கலந்து கொள்வர். (க-4)

## வீடியோ படக்காட்சி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில், 1999ஆம் ஆண்டிற்கான சிறந்த திரைப்படத்திற்கான விருது உட்பட 5 'ஒஸ்கார்' விருதுகளை பெற்ற Sam Mendes இயக்கிய American Beauty என்ற திரைப்படம் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படும். இந்தக் காட்சிக்கு ஆர்வலர்கள் எவரும் பங்கு கொள்ள முடியும் என்று புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (க)

## திறப்பு விழா

ஏழாலை தெற்கு அ.மி.த.க. வித்தியாலய பழைய மாணவி அமரர் ஜீத் சிவசத்தியபாலன் ஞாபகார்த்த சிறுவர் பூங்கா, பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் உதவியுடன் புனரமைக்கப்பட்ட கிணற்றுநீர் விநியோகத் திட்டம் ஆகியவற்றின் திறப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினர்களாக உடுவில் கல்விக்கோட்ட கல்விப்பணிப்பாளர் அ. தற்பரானந்தன், பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் பிரடெறிக் பிராடோ ஆகியோர் கலந்து கொள்வர். (க-4-133)

## நன்றி செலுத்தும் வழிபாடு

இலங்கைக்கு மெதடிஸ் மிஷனரிகள் வந்த 187 ஆவது ஆண்டை நினைவு கூரும் நன்றி செலுத்தும் வழிபாடும் சிறப்புரைகளும் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் புனித பேதுருவானவர் ஆலயத்தில் யாழ். சேகரக்குரு வண. கே. கருணசேகரா தலைமையில் நடைபெறும். (க-173)

# வாதரவத்தை இளைஞர் காங்கேசன் முகாமில்!

யாழ்ப்பாணம், ஜூன் 29

விடுதலைப்புலி உறுப்பினர்களுக்குச் சாப்பாடு மற்றும் தங்குமிட வசதிகளை வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர் ஜீவேஸ்வரா தெரிவித்துள்ளார்.

புத்தூர் வாதரவத்தையைச் சேர்ந்த குமாரவேலு சுதாகரன் (வயது 20) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருப்பவராவார்.

கடந்த மாதம் 12 ஆம் திகதி மாலை 5 மணியளவில் கப்புதூ அந்தணத்திடல் என்ற இடத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட இவர் 2 தினங்கள் பருத்தித்துறை இராணுவ முகாமிலும் பின்னர் 13 தினங்கள் பலாலி இராணுவ முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டபின்னர் காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் ஜீவேஸ்வரா மேலும் தெரிவித்துள்ளார். (க-4)

# சமய சந்நிதிகளில்

நீர்வேலி தெற்கு அம்மன் ஆலயத்தின் வருடாந்தஆனிப் பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெறும்.

முற்பகல் 10.30 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் பொங்கல் விழா ஆரம்பமாகி மாலை 4 மணியுடன் நிறைவு பெறும்.

பொங்கல் விழாவுக்கான சமயக் கிரியைகளை நீர்வேலி கந்தசுவாமி கோயில் பிரதம குரு சிவஸ்ரீ சுவாமிநாதக் குருக்கள் நடத்தி வைப்பார். (க-17)

★ ★ ★

பருத்தித்துறை தம்பசிட்டி ஸ்ரீமகாமாரி அம்மன் கோயில் வருடாந்த மணவாளக் கோல திவ்வியப் பெருவிழா இன்று காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. (க-173)

★ ★ ★

புலோலி குரும்பைகட்டி ஞானவைரவர் கோயில் வருடாந்த அபிஷேகம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறும் அபிஷேகத்தின் இறுதிநாளான எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை அபிஷேகப் பூர்த்தியை ஒட்டிய சங்காபிஷேகம் நடைபெறும்.

★ ★ ★

தென்புலோலி புற்றளை ஸ்ரீசித்தி விநாயகர் கோயில் வருடாந்த உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் இவ்வுற்சவத்தின் ரதோற்சவம் எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமையும் தீர்த்த உற்சவம் 5 ஆம் திகதி வியாழக்கிழமையும் இடம்பெறும். (க-173)

★ ★ ★

காரைநகர் பத்தர்கேணி அருள்மிகு வன்மீக விநாயகர் தேவஸ்தான பாலஸ்தாபன கும்பாபிஷேகம் எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.40 மணிமுதல் நடைபெற உள்ளது.

எதிர்வரும் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாலஸ்தாபன கும்பாபிஷேகத்திற்கான ஆரம்பக் கிரியைகள் நடைபெறும். (க-73)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 11 – 08 – 1939

விண்ணில்: 10 – 06 – 2000

## பரமசாமி நவரத்தினம்

ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள்
நினைவுகள் எம் மனதை விட்டு என்றும் மாறாதையா

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**சகோதரர்கள்**

இல. 10, முதலியார் லேன்,
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம். (89558)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருந்திய அழைப்பும்



மண்ணில்: 10 – 03 – 1911

விண்ணில்: 30 – 05 – 2001

வேலணை மேற்கு, சிற்பனை

## திருமதி கந்தசாமி விசாலாட்சி

வேலணை பதி உதித்த எங்கள்
வித்தகியே! உனை மறவோம்!
சீலமாய் எமை வளர்த்த
சேவையினை மனத்திருத்தி
ஆறாத காதலுடன் உன்னை
அனுதினமும் போற்றிடுவோம்!
வாராத மாமணி போல்
வந்தவளே! வையமதில்
நீராக கண்ணால் நித்தமும் நீர்வடிய
பாராயணம் பண்ணிபாடுகிறோம் உன்புகழை.

அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டும் தொலைபேசி, தந்தி மூலம் எமது துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (29-6-2001) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நிகழும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

49/3, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம். (89562)

உதயன்

## ஆசிரிய நியமனங்களில் நியாயம் தேவை

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்குள்ள 4 ஆயிரத்து 550 வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. இதனால் இப்பிரதேசத்தில் சுமார் இரண்டு லட்சம் தமிழ் மாணவர்களின் கல்வி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இப்பிரதேசக் கல்வி அதிகாரிகள் அண்மையில் நடத்திய ஆய்வு ஒன்றின் மூலம் இந்தத் திடுக்கிடும் தகவல் வெளியாகியிருக்கின்றது.

வடக்கு-கிழக்கில் 6 லட்சத்து 31 ஆயிரம் மாணவர்கள் உள்ளனர். இவர்களுக்கு கல்வி வழங்க 23 ஆயிரம் தமிழ்மொழி மூல ஆசிரியர்களும் 4 ஆயிரத்து 45 சிங்களமொழி மூல ஆசிரியர்களும் தேவை. ஆனால் 18 ஆயிரத்து 450 தமிழ்மொழி மூல ஆசிரியர்களும் 4 ஆயிரத்து 213 சிங்களமொழி மூல ஆசிரியர்களும் இப்பிரதேசத்தில் பணியாற்றுகின்றார்கள்.

அதாவது தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் 4 ஆயிரத்து 550 பேருக்குப் பற்றாக்குறை. சிங்களமொழி மூல ஆசிரியர்களோ தேவைக்கு அதிகம்.

இதேபோன்று இப்பிரதேசத்தில் சுமார் ஐந்நூறு தமிழ்மொழி மூல அதிபர் பதவிகளும் நிரப்பப்படாமல் வெற்றிடமாக உள்ளன.

இவை, நமது பிரதேசத்தின் கல்வி நிலை பற்றிய அவலத்தை எடுத்துக்காட்டும் புள்ளி விவரங்கள். நமது கல்வித்துறை உயர் நிர்வாகிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் இது சமர்ப்பணம்.

இந்த ஆசிரியப் பற்றாக்குறை பாதிப்பு ஒரு புறம் என்றால், அந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளில் காட்டப்படுகின்ற குளறுபடிகள் அதை விஞ்சுபவையாக உள்ளன. இது குறித்து நமது தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் அண்மையில் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றின் இறுதிநாள் நிகழ்வில் குறிப்பிட்ட கருத்துக்கள் நோக்கற்பாலவை.

"தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெறும் ஆசிரியர் தெரிவு முறை எமது கல்வி அபிவிருத்திக்குத் தடையாக இருக்கின்றது.

"சாதாரண சிற்றூழியர் முதல் கொண்டு எழுதுவினைஞர் வரையான பதவிகளுக்கு ஆள்களைச் சேர்ப்பதற்குக் கூடப் போட்டிப்பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. அதன் மூலம் விண்ணப்பதாரிகளின் தகுதி, திறமை பரிசோதிக்கப்பட்டே நியமனங்கள் வழங்கப்படுகின்றன.

"ஆனால் சமுதாயச் சிற்பிகளான ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து நியமனம் வழங்குகின்ற முக்கிய விவகாரத்தில் இத்தகைய - தகுதி, திறமை பரிசோதிக்கும் - நடைமுறை பல சந்தர்ப்பங்களில் பின்பற்றப்படுவதில்லை. தொண்டர் ஆசிரியர்கள் எனக்கூறிக் கொண்டு போராட்டம் நடத்துபவர்களுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படுகின்றன. நமது கல்வித் துறையின் உயர்தரத்தைப் பேணவேண்டுமென்றால் இது விடயத்தில் சரியான நடைமுறைகள் பின்பற்றப்பட்டே ஆகவேண்டும்" - இவ்வாறு சுட்டிக்காட்டியிருக் கின்றார் தீவக வலயக் கல்விப்பணிப் பாளர்.

தொண்டர் ஆசிரியர்களின் தன்னலமற்ற பணி பாராட்டப்பட வேண்டியதுதான்; அங்கீகரிக்கப்பட வேண்டியதுதான். ஆனால் அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும்போது அவர்களது தகுதி, திறமை சோதிக்கப்பட்டே ஆகவேண்டும். வெறுமனே - பணிக்காலம் பற்றிய - அதிபர் ஒருவரின் சான்றிதழுடன் நியமனங்களை வழங்கி, தகுதியானவர்களை அப்பதவிகளுக்கு நியமிக்கும் வாய்ப்பைத் தட்டிப்பறித்து விடக்கூடாது.

ஒன்றுசேருவதற்கான அடிப்படை உரிமையை வைத்துக்கொண்டு நடத்தப்படுகின்ற போராட்டங்களுக்கு மசிந்து, தமது அரசியல் செல்வாக்கைப் பலப்படுத்திக் கொள்ளும் நோக்குடன் இது விடயத்தில் அரசியல்வாதிகள் மேற்கொள்ளும் - தூரப் பார்வையற்ற - குறுகிய நோக்கங்கொண்ட செயற் பாடுகளுக்கு நமது சமூகம் தொடர்ந்து இடம் கொடுத்தால் நமது கல்வித்துறை அதலபாதாளத்தில் வீழ்வது நிச்சயம்.

அரசியல்வாதிகளின் பட்டியலுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதும் பெரும் ஊழல் நடவடிக்கையே என்பதை அதிகாரிகள் புரிந்து கொள்ளவேண்டும்.

# தெற்கு யாத்திரிகர் 1,000 பேர் புதனன்று மடுவுக்குப் பயணமாகினர்

## ஒரு வார காலம் தங்கியிருப்பர்

வவுனியா,ஜூன்29

தென்னிலங்கையைச் சேர்ந்த சுமார் ஆயிரம் யாத்திரிகர்கள் அடங்கிய குழு ஒன்று ஒருவாரகால விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் மடுவுக்குப் பயணமானது.

இரத்தினபுரி ஆயர் வண.மல்கம் ரஞ்சித் இந்தக் குழுவுக்குத் தலைமை வகித்துச் சென்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியளவில் 20 பஸ்களில் வவுனியாவை வந்தடைந்த இந்தக் குழுவினர் பிரமணாளங்குளம் ஊடாக மடுவுக்கான பயணத்தை ஆரம்பித்தனர்.

எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை மடுத் தேவாலயத்தில் இடம்பெறும் முக்கியவழிபாடு ஒன்றில் இவர்கள் கலந்துகொள்வர் என்றும்-

மடுவில் தங்கியிருக்கும் காலத்தில் குழுவினர் தட்சணார்மருதமடுவில் உள்ள அகதிமுகாமுக்குச் சென்று அகதிகளுக்கு அன்பளிப்புக்களை வழங்குவர் என்றும் -

வவுனியாத் தகவல்கள் தெரிவித்தன. (ம-7)

## திருடப்பட்ட சைக்கிள் மரத்திலிருந்து மீட்பு

யாழ்ப்பாணம்,ஜூன்29

அச்சுவேலி தம்பாலைப் பகுதியில் கடந்த 17ஆம் திகதி திருடப்பட்ட சைக்கிள் ஒன்று மரத்தில் கட்டித் தொங்கவிடப்பட்ட நிலையில் உரிமையாளரால் மீட்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றிற்கு முன்பாக இருந்த மரத்தில் கயிற்றில்கட்டித் தொங்கவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட சைக்கிள் கடந்த செவ்வாயன்று உரிமையாளரால் மீட்கப்பட்டது.

இந்தச்சம்பவம் தொடர்பாக இரு இளைஞர்கள் அச்சுவேலிப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். (ம-6-4)

## தமிழ் விழா

யாழ்ப்பாணம், ஜூன்29

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி தமிழ்ப் பேரவை நடத்தும் தமிழ் விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை விவேகானந்தா மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் கலந்து கொள்வார். (ம)

## நாட்டு நடப்பு

**ரியூட்டறி - I**

ஒழுக்கிடும் ஓலைக் கொட்டில்
ஒடிந்திட்ட வாங்கு மேசை
குழுக்களாய் பலவாய் அங்கு
கூடிறார் ஆயிரமாய்
கத்துறார் மூச்சு வாங்க
களத்தினில் கொமாண்டர் போல
மெத்தவே அதிர்ச்சி உற்றான்
மேல் நாட்டான் இதனைக்கண்டு
சத்தியம் பண்ணிச் சொன்னான்
செகத்தினில் எங்குமே இதுபோலில்லை

- *விகடகவி* -

### வடக்கு புனரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சு

# கால்நடை மாதிரிப் பண்ணை நிறுவுவதற்கு விவசாய பீடத்துக்கு 18 லட்சம் ரூபா நிதி

## பால் உற்பத்தி நிறுவகமும் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஜூன்29

யாழ்.குடாநாட்டில் கால்நடை அபிவிருத்தி மற்றும் பால் உணவு உற்பத்தித்துறையில் துரித வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் மாதிரி கால்நடைப் பண்ணையையும் அதனோடு இணைந்ததாக பால் உணவு வகைகளை உற்பத்திசெய்யும் நிறுவனத்தையும் அமைப்பதற்கான திட்டம் ஒன்றிற்கு யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்துக்கு வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு 18 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீட விலங்கு வேளாண்மைத் துறையினால் இந்த மாதிரி கால்நடைப் பண்ணையும் அதனோடு இணைந்த பால் உணவு வகைகளை உற்பத்தி செய்யும் நிறுவகமும் விரைவில் அமைக்கப்பட உள்ளன.

திருநெல்வேலிப் பகுதியில் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு சமீபமாக உள்ள 4 ஏக்கர் நிலப்பரப்பில் இத்திட்டம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் என்று ஈ.பி.டி.பியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாதிரி கால்நடைப் பண்ணை மூலம், நவீன ரக கால்நடை இனங்கள் பற்றிய அறிவு, தொழில் நுட்பங்கள் மற்றும் சூழலைப் பேணிப் பாதுகாக்கும் வகையிலான மாற்று கால்நடைத் திட்டங்கள் ஆகியன குடாநாட்டு விவசாயிகளுக்கும் கால்நடை வளர்ப்போருக்கும் மாணவர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

பால் உணவு வகைகளை உற்பத்தி செய்யும் நிறுவகம் வாயிலாக குடாநாட்டில் உற்பத்தியாகும் பாலினைப் பயன்படுத்தி யோக்கட், பட்டர், நெய், தயிர் போன்ற பாற் பொருள்கள் உற்பத்தி செய்யப்படவுள்ளன. (ம)

## 'பெற்றோமக்ஸ்' வெடித்து ஒருவர் காயம்

வடமராட்சி, ஜூன்29

எரிந்து கொண்டிருந்த 'பெற்றோமாக்ஸ்"க்கு காற்று அடித்துக் கொண்டிருந்த போது அது வெடித்ததில் ஒருவர் எரிகாயங்களுக்குள்ளானார்.

பருத்தித்துறை வி.எம். வீதியைச் சேர்ந்த மயில்வாகனம் பிரேமச்சந்திரன் (36 வயது) என்பவரே இவ்வாறு காயங்களுக்குள்ளானவராவார்.

இவர் வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (ம-173)

# பெண்களைத் தலைவராகக் கொண்ட 125 குடும்பங்களுக்கு விரைவில் வீடுகள்

## ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன உதவியுடன் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஜூன்29

பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட 125 குடும்பங்களுக்கு ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை, கோப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து இந்த வீடுகள் அமைத்துக் கொடுப்பட உள்ளன. இதற்கான குடும்பங்கள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் ஒரு வீடு அமைப்பதற்கென ஒரு லட்சத்து 7 ஆயிரம் ரூபா பெறுமதியான கட்டடப் பொருள்கள் வீதம் வழங்கும்.

வடக்கின் மீள் குடியமர்வு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை தலா 18 ஆயிரத்து 750 ரூபாவை மேசன் மற்றும் தச்சுக் கூலியாகவும் வழங்கும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்திட்டம் தொடர்பாக அடுத்த மாதம் 2ஆம், 3ஆம் திகதிகளில் கிராம அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், திட்டமிடல் உத்தியோகத்தர்கள் போன்றவர்களுக்கான கருத்தரங்குகள் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தினால் நடத்தப்படவுள்ளன. (ம-5)

## விபத்தில் இளைஞர் காயம்

நீர்வேலி தெற்கு, பூதர்மடம் பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - ஓட்டோ விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த எஸ்.சர்வேஸ்வரன்(வயது 22) என்ற இளைஞரே இந்த விபத்தில் காயமடைந்தவராவார். காயமடைந்த இளைஞர் உடனடியாக கோப்பாய் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-17)

## மகஜர் கையளிப்பு

வலி.தென்மேற்கு,ஜூன்29

வலி.தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள ஆனைக்கோட்டை காத்தவராயர் ஆலயத்தில் இவ்வருடம் மிருக பலிக்கு அனுமதி வழங்குமாறு அவ்வூர் மக்கள் கையெழுத்திட்ட மகஜரை பிரதேச சபைத் தலைவரிடம் வழங்கியுள்ளனர். (க-185)

### கடந்த செவ்வாயன்று நடைபெற இருந்த

# சுகாதாரக் குழுக் கூட்டம் நிறுத்தப்பட்டதற்கு மாநகர சபை புளொட் உறுப்பினர் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜூன்29

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற யாழ்.மாநகர சபைக் கூட்டத்தின் சுகாதாரக் குழுக் கூட்டம் இடைநிறுத்தப்பட்ட மைக்கு மாநகரசபையின் புளொட் உறுப்பினர் எஸ்.ஜெயச்சந்திரன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாநகரசபை உறுப்பினர்கள் சமர்ப்பிக்கும் பிரேரணைகள் குழுக்களின் செயற்பாட்டிற்கு புறம்பான விடயமானால் அதனை நிராகரிக்கலாம். அதற்காகச் சமர்ப்பிக்கும் பிரேரணைகளை ஏற்கமறுப்பதோ, நிராகரிப்பதோ குழுத் தலைவர்களின் அதிகாரத்துக்கு உட்பட்ட செயல் அல்ல. விடயங்கள் பற்றி விவாதித்து, அதனைப் பொதுச் சபையின் கீழ் தீர்மானத்திற்காக சிபார்சு செய்வதே குழுககளினது கடமையாகும்.

குழுத்தலைவர்கள் தன்னிச்சையாகச் செயற்பட்டு மக்களின் வேண்டுகோள்களை தட்டிக் கழிப்பதுடன் அதிகாரத் தோரணையோடு செயற்படுவது மக்கள் பிரதிநிதிகளாக இருப்பதற்கும், பொறுப்பான பதவிகளை வகிப்பதற்கும் பொருத்தமற்றவர்கள் என்பதையே தெளிவுபடுத்துகின்றது.

ஆகவே பொருத்தமானவர்களை தலைவர்களாக நியமிக்க வேண்டும் - என்று நேற்று முன்தினம் ஜெயச்சந்திரன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


## நாளை

ஆனி 16
சனிக்கிழமை
திதி: தசமி
முன்னிரவு 9.07 வரை.
நட்சத்திரம் : சித்திரை
காலை 6.43 வரை.
சுபநேரம் : 2.56 - 4.26
ராகுகாலம் : 8.56 - 10.26
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

தாயின் உள்ளத்தை அறிபவன் கருணையை அறிபவன் ஆகிறான்.

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



புல்லு நிறைந்த வெளியில்
நிலக்கண்ணி ஒளிந்திருக்கக்கூடும்
அல்லும் பகலும் நீவிர்
அதிகம் கவனம் எடுத்திடுவீர்
'நிலக்கண்ணி' வெடிக்குமானால்
நீ நிதமும் முடமாய் வாழ்வாய்!

# 17 ஆம் நூற்றாண்டு கத்தோலிக்கத்தின் ஆணி வேர் தேடும் ஓர் அரிய முயற்சி

## நூல்விரிசை

கிறிஸ்தவத்துக்குள் பண்டைய பாரம்பரிய முக்கியத்துவம் கொண்ட பாஸ்கா விழாவினுள் 17 ஆம்,18ஆம் நூற்றாண்டு கத்தோலிக்கத்தின் ஆணி வேர் தேடும் ஓர் அரிய முயற்சி தவத திரு பிலேந்திரன் 'கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்' எனும் ஆய்வு நூல்.

ஆய்வுகளிலிருந்து அந்நியப்படுத்தப்பட்டுக் கொண்டே செல்லும் கத்தோலிக்க சிந்தனையாளர் வட்டத்துக்குச் சவால் விடுவது போன்று, அதன் ஒல்லாந்தர் கால நெருக்குதல்களுக்குள் எழுந்த "வியா குலங்களை" பக்தி, அரசியல், இலக்கியப் பாணியில் சித்திரிக்கிறார். யக்கோமோ கொன்சால்ஸ் முனிவர்.

இவர் பற்றிய சிறு வரலாற்றுக் குறிப்பு, முதல் அத்தியாயத்தில் காணப்படுகிறது. மொழி வல்லுநர் என்ற அம்சம் லத்தீனிய, போர்த்துக்கேய, ஒல்லாந்த, தமிழ் சிங்கள மொழிகளை நன்கறிந்தவர் எனக் கூறுகின்றது. ஆயின் நூலாசிரியர் மலையாளம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும் சேர்த்திருக்கலாம்.

கொன்சாலசின் மூதாதையரை கிறிஸ்துவிடம் கொண்டுவந்தவர் மறை இரத்த காட்சி புனித அக்குவீவா.

கிறீஸ்துவின் வியாகுலங்கள் அடிமனதில் பதிந்து வேர்விட்டு, தாம்பரணியின்(தாமிர பரணி என்றும் அழைத்தனர்). (இலங்கை) வட தென் திசை, சிங்கள தமிழ் ஒப்பாரி ஆகி, கிஸ்தவ ஓலங்களின் மலையாள ஓசை மீட்ட, யாழின்இசையாகவும், சிங்கள மகுள்பேர நாதமாகவும் வியாகுல பிரசங்கங்களில் ஒலிப்பதிவு தெளிவுபடுத்தப்படுகிறது.

யேசுசபை 'மன்ரேசா' புகழ் இன்னாசியாரின் ஆன்மீகப் பயிற்சிகளின் அணுகுமுறையில் மனத்தோற்றம் முன்வைக்க, உடுக்கு பாசையும் இதயத்தை ஊடுருவும் ஓசை நயமாயும், வேதகலாபனைக்கு உட்படுத்தலுக்கும் கத்தோலிக்க கண்ணீர் நதியில் எதிர் நீச்சல் போடும் சிங்கள, தமிழ் கிறிஸ்தவர்களிற்கு கல்லுமே கரைந்துருகும் கத்தோலிக்க திருவாசகமாகவும் வியாகுல பிரசங்கத்தை -

1. அறிமுகம்
2. அதன் தவக்கால நோக்கு
3. அதன் ஒப்புரவு நோக்கு
4. பக்தி வழிபாட்டு நோக்கு
5. விவிலிய நோக்கு
6. இறையியல் நோக்கு -

எனப் படிப்பாயாகத் தெளிவாக விளக்குகிறார்.

இவை மையக் கருத்துகள் செறிந்த பகுதிகள். திரு அந்தோனி மிராண்டா குறிப்பிடுவது போன்று அங்கீகாரம் பெறாத நூல்களில் இருந்து தொகுக்கப்பட்ட வாசகங்கள். ஆசிரியர் குறிக்கும் அங்கீகரிககப்படாத நற்செய்திகளிலிருந்து தொகுக்கப்பட்டிருக்கலாம். இவர் குறிப்பிடும் நான்கு சம்பவங்களும் அக்கால கட்டத்தில் ஐரோப்பாவிலிலும் பின் வீரமாமுனிவர் ஊடாக பிரபல்யமான இறைவனின் நகர் (**DE CIVITA TE DEI**) என்ற மேரி அகிராடா எழுதிய பரவசக்காட்சி நூல்களில் காணக் கிடக்கின்றன.

நாட்டார்பாடல் பாரம்பரியமும், போர்த்துக்கேய மறைபரப்பு காலத்திலிருந்தே பாசோ முறையிலான காட்சி வழிபாட்டுப் பாங்கு இலங்கையில் வழக்கத்தில் இருந்திருக்கிறது, என்பது மிகப்பொருத்தம். அக்கால கட்ட, கட்புல, செவிப்புலன் பார்வையில் செவிப்புலன் ஊடகத்தை பயன்படுத்தி வெற்றிகரமாக அன்றும் இன்றும் உள்ளிடுதலை வெளியிடுதலைக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. இது கேட்போரையும் பாஸ்கா அனுபூதிகளாக்கி விடகிறது. இதற்கு பொது மக்கள் சொல், வசன பாவனை, நவீன இளம் சமூகத்தினருக்கு எவ்வளவு எடுபடுமோ என்ற கேள்வியை பின்புறம் வைத்துக்கொண்டு, மிராண்டாவின அவதானிப பின்படி பல வருடங்களாகவும் முன்னொருபோதும் உடக்கு பாஸ்கா காட்சியைப் பார்த்திராத பல்லாயிரக் கணக்கான மக்கள பரவசம் அடைந்தனர். 25,000 பேர் வரை இரவு முழுவதும் அமைதியாக, பக்தி உணர்வுடன் அமர்ந்து பார்த் துக்கொண்டிருந்தனர்.

இவ்வூடகம், பாஸ் (உடக்கு), வியாகுல பிரசங்கம் இணைப்பு பக்திக்கு ஊடகமாக - கடந்துபோகும் இஸ்ராயேலுக்கும், ஒடுக்கப்பட்ட தமிழினததுக்கும், அர்த்தமும் அவசரத் தேவையும் ஆக்குகிறது.

சுகீத குறள் எழுதிய யாக்கோமோ கொன்சர்ஷஸ், பிரளாவ நடையில் தேவஅருள் வேதபுராணத்தையும் (பக்.66 - யாழ். திருச்சபை வரலாறு - ஜே.ஈ.ஜெயசீலன்), சிங்களத்தில் அக்காலகட்டத்தின் தன்னிகரற்ற சிங்களமொழி வியாகுல பிரசங்கத்தையும், நாட்டார் இலக்கிய வடிவங்களில் ஒன்றாகிய ஒப்பாரி இலக்கியத்தில் எழுதவைத்தது என்றால் - ஒரு வரலாற்றுக்கால தேவை உணர்ந்தே யாக்கோமோ கொன்சாலஸ் இதைப் படைத்தார்.

ஜனரஞ்சக ஊடகமாக பாவிக்க உடக்குப் பாசும், வியாகுல பிரசங்கமும் 1730 இல் பன்னிரு பிரதிகள் எடுக்கப்பட்டு (பனையோலை சுவடிகளில்) உபயோகிக்கப்பட்டது என்கிறது 1745 ஆம் ஆண்டு அறிக்கை. இது பொது நிலையினரால் இற்றை வரை பேணி, வளர்க்கப்பட்டது. பறப்பாங்கண்டல் பெரியகோவில் தொட்டு பேசாலை 2000 வரை தொடரும் உயிர்ப் பாரம்பரிய கலை வடிவம் ஆக்கியவர்களும் பொது நிலையிரே. இதில் கொன்சலஸின் தரிசனப் பார்வை சரியாக இருந்திருப்பதையே பிலேந்திரனின் ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.

பகுதி -2 பரவலான தவக்காலப் பக்தி முயற்சிகளை ஆராய்கிறது.

| | |
|---|---|
| நூல் | :– "கத்தோலிக்க கலை இலக்கியப் பாரம்பரியம்" |
| ஆசிரியர் | :– அருட்திரு ஞா.பிலேந்திரன் |
| | யாழ். பல்கலைக்கழகம் |

நன்கு செய்திருப்பினும் அவை வெறும் பின்னணியே. அதுவும் பிரிட்டிஷார் கால, சமேரியா, பொஞ்சீன், யூலன் ஆண்டைகைகளின் நிர்வாகத்தில் இடம் பெற்ற மகாமனந்திரும்புதல்களும் ஞான ஒடுக்கங்களின் ஐரோப்பியப் பின்னணிப் பாதிப்பே.

தொடர்ந்து வண.லோங் தொட்டு வண.சவிரி வரை, முதலில் ஆங்கிலத்திலும் பின்னர் வண.மரியாம் பிள்ளை, வண.அருள்நேசனின் தமிழ் ஆக்கத்திலும், வண.சவிரி, வண.யோண்சன் முதலியோரின் நெறியாக்கத்திலும் நடைபெற்ற நீண்ட பாரிய மேடையேற்ற யேசுவின் திருப்பாடுகள், இன்று 3 ஆம் மிலேனியப் போர், புலம்பெயர்வு ஆகிய புதிய பிரச்சினைகள் மத்தியில், புவிமயமாக் கல் பின்னணியில், நவீனத்துவ நாடக - அரங்க வளர்ச்சியில் வைத்துப் பார்க்கும் இடத்து உடக்கு பாசும், பசாம் பிரசங்க சடங்குக்கும் இன்றைய மனித நாடகங்களுக்கும் இடையே இடைவெளி பெருகுவதை அவதானிக்க முடிகிறது.

*வண. பிதா ஜெ. இ. ஜெயசீலன்*
இடை வரவு விரிவுரையாளர்,
யாழ்.பல்கலைக்கழம்.

கொன்சாலஸ் வரலாற்றுப் பாரம் நிறைந்த ஊடகத்துக்கும், இன்றைய நாடக ஊடகங்களுக்கும் நற்செய்தி - மறைபரப்பு வலு எவ்வளவு என்பதை மனதில் கொண்டே நூல் ஆசிரியர் தனது 'இறுதிப் பந்தியை' வரைந்துள்ளார். திருப்பாடுகளின் காட்சி உடக்குகளினால் காண்பிக்கப்படும் நிலையில் இருந்து, மனிதர்களினால் நடிக்கப்படும் நிலைக்கு மாற்றம் பெற்றமை, நாடகத் தன்மை மேலோங்கி - பக்தி குறைந்து செல்வதைக் காட்டுகிறது.

மீண்டும் பக்தி நிலை இயல்பு மேலோங்குமா என எதிர்பார்க்க முடியாது எனத் தோற்றுகிறது என்ற ஆசிரியரின் முடிவு, உண்மையை நோக்கி நகர்வதே. ⁂

# 1983 ஜூலையில் வேலை இழந்தோரில் ஒரு சாராருக்கு அரசு பாரபட்சம்

தென்னிலங்கையில் சேவையாற்றிய அரச கூட்டுத்தாபன தமிழ் ஊழியர்கள் 1983 இனக்கலவரத்தில் வேலைத்தலங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு, தப்பி வந்த பின்னர் அரசு மீண்டும் வேலைக்கு அழைத்தபோது சிலர் பயத்தின் காரணமாக வேலைக்குச் செல்லவில்லை.

*வே. மகேந்திரன்*
(பாதிக்கப்பட்டோர் சார்பாக)

அரசு அவர்களை வேலையில் இருந்து நீக்கியது. 1988இல் அவர்களுக்காக வந்த சுற்றறிக்கையின்படி, விரும்பியவர்கள் 1983இல் இருந்து ஓய்வுபெறவும் திரும்ப வேலையைத் தொடரவும் அனுமதித்தது. இதனால் ஓய்வுபெற்றவர்களுக்கு 1983 தொடக்கம் 1988 வரையிலான காலத்திற்கு நிலுவை ஓய்வூதியம் வழங்கப்பட்டு, தொடர்ந்து ஓய்வூதியம் பெறுகிறார்கள். ஆனால் மீள வேலையில் தொடர்ந்தவர்களுக்கு இந்த இடைப்பட்ட 6 வருடத்திற்கு ஓய்வூதியமோ சம்பளமோ வழங்கப்படவில்லை. 1983க்கு முன்பு சேவைக் காலத்தில் மிகுதியாக இருந்த ஓய்வு நாள்களில் ஆகக் கூடியது 2 மாத கால சம்பளமே வழங்கப்பட்டது. எனவே இதில் சிறு பாகுபாடு தென்படுகிறது. ஆனால், அன்று எப்படியும் வேலை கிடைக்கட்டும் என்ற அவாவில் ஊழியர்கள் இருந்ததால் இந்தப் பாகுபாடு சுட்டிக் காட்டப்படவில்லை.

1980இல் பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வேலையை இழந்தவர்களுக்காக 1993இல் சுற்றறிக்கைகள் வந்தன.

அவர்களுக்காக மிகவும் இரங்கி எழுதப்பட்ட அச்சுற்றறிக்கைகளில் கூடுதலான சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனெனில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் ஒரு சிலரைத் தவிர அநேகர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். அந்த சலுகைகளில் சில -

1. 1980இல் இருந்து 1993வரையான காலத்திற்கு முழுச் சம்பளமும் வழங்குதல்.

2. வேலை இழந்த மன விரக்தியால் ஏற்பட்ட நோய், இறப்பு போன்ற பாதிப்பைப் பொறுத்து ஒரு லட்சத்திற்குக் கூடுதலான பண நஷ்டஈட்டுக் கொடுப்பனவு.

இச்சலுகை வழங்கல்களை அறிந்தவுடன், இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அதேபோன்று சலுகைகள் வழங்க வேண்டுமென்று அப்போதைய ஜனாதிபதி, பொது நிர்வாக அமைச்சர், இன்றைய குறை கேள் அதிகாரி ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வந்தும் பயன் ஏற்படவில்லை.

1988இல் வழங்கப்பட்ட நிபந்தனைக்கமைய மீளக்கடமையை ஏற்றுக்கொண்ட பின், இன்று நாங்கள் சலுகைகளைக் கோருவது, (அவை மற்றவர்களுக்கு வழங்கப்பட்டாலும்) சட்டரீதியாக நியாயமாகாமல் இருக்கலாம்.

ஆனால் மனிதாபிமான அடிப்படையில் இவ்விஷயத்தை நோக்கினால் இதில் பாரபட்சம் காட்டப்படுவது தெரியவரும்.

இப்பாகுபாடுகளை அமைச்சரவையில் மட்டுமே நீக்கமுடியும்.




எனவே அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர, எங்கள் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் உதவியை வேண்டி நிற்கிறோம். நிச்சயம் அவர் தன்னாலான முயற்சியால் எங்கள் கோரிக்கையை நிறைவேற்றுவார் என எதிர்பார்த்திருக்கிறோம். ⁂

## விபத்தில் வயோதிபர் காயம்

யாழ்ப்பாணம்,ஜூன்29

ஆவரங்கால் சிவன் கோயிலடியில், பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியில் இராணுவ டிரக் வண்டியும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த,கரவெட்டியைச் சேர்ந்த மயில்வாகனம் குமாரவேல் (வயது 59) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் அச்சுவேலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.(ம-15)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூன்29

யாழ்.சன்மார்க்க மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதனும் சிறப்பு விருந்தினராக யாழ். கோட்டக் கல்வி அதிகாரி ஏ.இராஜகோபாலும் கலந்து கொள்வர். (ம)

## யாழ். கல்வி வலய மட்டத்தில் மகளிர் தினப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜூன்29

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட வலய மட்ட கட்டுரைப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இரு பிரிவுகளாக நடத்தப்பட்ட இப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர், விவரம் வருமாறு:-

☆ பிரிவு I

முதலாமிடம் - பாரதி குணரத்தினம் (யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

இரண்டாமிடம் - ரஜினிஜா இராசரத்தினம் (வேம்படி மகளிர் கல்லூரி)

மூன்றாமிடம் - யோகராணி பூபாலசிங்கம் (கொக்குவில் இராமகிருஷ்ண வித்தி.)

☆ பிரிவு II

முதலாமிடம் - ஜெயமலர் பத்மநாதன் (ஸ்ரான்லிக் கல்லூரி)

இரண்டாமிடம் - த.எந்துஜா (கோபபாய் கிறிஸ்தவ கல்லூரி)

மூன்றாமிடம் - ஜசிந்தா இராமச்சந்திரன் (வேம்படி மகளிர் கல்லூரி).


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கோண்டாவில் வடக்கு ஞானவைரவர் ஆலய தொண்டர் சபையினரால் நடத்தப்பட்ட சமய பாடப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில்களைத் தந்துதவிய நல்லூர்ப் பிரதேச சபைத் தலைவரும் யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. உதவி அமைப்பாளருமான



உயர்திரு.
க.மணிபல்லவராஜன்
(நிசாந்தன்)
அவர்களைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

- ஆலயத் தொண்டர்சபை.

(89442)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 26 - 03 - 1926



மறைவு 30 - 05 - 2001

திருமதி
பொன்னம்மா நாகநாதன்

அன்பிலே எம்மைத் தாங்கி
அன்பையே உணர்வாயூட்டி
அன்பிலே வழியும் காட்டி
அணைத்தெம்மை வளர்த்த அம்மா!
உங்களை எண்ணிப் பார்க்க
உள்ளமே உருகும் அம்மா!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சங்கையான் வீதி,*
*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.* (89502)

- பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## பிரதம நீதியரசருக்கு எதிரான பிரேரணை:

# சபாநாயகரின் தீர்ப்பை அடுத்து உயர் நீதிமன்றத்தின் நிலை என்ன?

**பிரதம நீதியரசருக்கு எதிராக எதிர்க்கட்சியால் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற விசாரணைப் பிரேரணை தொடர்பாக சபாநாயகர் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிப்பதைத் தடைசெய்யும் விதத்தில் உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு விடுத்ததும் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க நீதிமன்றத்தின் உத்தரவை நிராகரித்ததும் தெரிந்தவையே. இவ்விடயம் தொடர்பாக இக்கட்டுரை ஆராய்கிறது. எம்.எஸ்.எம். அயுப் என்பவரால் எழுதப்பட்டு 'லக்பிம' வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

கடந்த புதன்கிழமை (20.06.2001) நாடாளுமன்றம் சென்ற எமக்கு இற்றைக்குச் சரியாகப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற நாடாளுமன்ற நடவடிக்கை நினைவுக்கு வந்தது.

அன்றுபோல் அல்லாது கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் ஆசனங்கள் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களால் நிரம்பியிருந்தன. இருப்பினும் அன்றும் கடந்த புதன்கிழமையும் அனைவரது கவனமும் ஒன்றாகவே இருந்தது. அதாவது சபாநாயகர் என்ன கூறப்போகிறார் என்ற எதிர்பார்ப்பே அதுவாகும்.

அன்று ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவுக்கு எதிராக 120 நாடாளுமன்ற உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்டதாகக் கூறப்பட்ட குற்ற விசாரணைப் பிரேரணையை நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்ப்பதா இல்லையா? என்பது தொடர்பாக சபாநாயகர் எம்.எச்.மொஹமட் தனது முடிவினை வெளியிடவிருந்தார்.

கடந்த புதன்கிழமை பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவுக்கு எதிராக 77 நாடாளுமன்ற உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்டு சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட குற்ற விசாரணைப் பிரேரணையை நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்ப்பதா இல்லையா? என்பது தொடர்பான தனது முடிவை சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க வெளியிடவிருந்தார்.

குற்ற விசாரணைப் பிரேரணையில் குறிப்பிடப்பட்ட குற்றங்களை விசாரிப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை சபாநாயகர் நியமிப்பதைத் தடுக்கும் விதத்தில் கடந்த 6ஆம் திகதி உயர் நீதிமன்றம் சபாநாயகருக்கு இடைக்காலத் தடை உத்தரவை விதித்திருந்தது.

1991இல் சபாநாயகர் எம்.எச். மொஹமட்டிற்கு அரசமைப்புக்கும் நிறைவேற்று அதிகாரங்களுக்கும்



சபாநாயகர்

இடையேயான பிரச்சினைக்குத் தனது முடிவை அறிவிக்க வேண்டியிருந்தது. ஆனால் கடந்த புதன்கிழமை சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கவுக்கு அரசமைப்புக்கும் நீதிமன்றத்திற்கும் இடையேயான பிரச்சினைக்கான தீர்வினை அறிவிக்க வேண்டியிருந்தது. இதைப் பிரச்சினை என்பதிலும் பார்க்க அதிகாரப் போராட்டம் எனக் கூறலாம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட பொருத்தமற்ற ஒருவரை நீக்குவதற்காக ஜனநாயகக் குடியரசின் 2ஆவது அரசமைப்பின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் 1991இல் குற்ற விசாரணைப் பிரேரணை தாக்கல் செய்யப்பட்டிருந்தது. ஆனால் இன்று பொருத்தமற்ற நீதித்துறைத் தலைவரை நீக்குவது தொடர்பாக அரசமைப்பில் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய குற்ற விசாரணைப் பிரேரணை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கடந்த 20ஆம் திக்தி சபாநாயகர் அனுரா பண்டாரநாயகக குறற விசாரணைப் பிரேரணை தொடர்பாக முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றிய கட்டளையை வழங்கியே தனது தீர்ப்பினை வழங்கினார். அவர் அந்தத் தீர்ப்பினை வழங்கும் வரை 14 நாள்களாக அதை எதிர்பார்த்து நாடே காத்திருந்தது.

1991இல் சபாநாயகர் தனது தீர்ப்பின் மூலம் கெட்டவன், திறமையற்றவன் என்ற பெயரைச் சம்பாதித்தார். ஆனால் இன்று சபாநாயகர் அனைவராலும் போற்றப்படும் வீரனாகியுள்ளார்.

சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க சபையில் நீண்ட உரையை அடுத்தே தனது தீர்ப்பினை வழங்கினார். நாட்டைக் கலக்கிய ஒரு வழக்கொன்றின் தீர்ப்பினை நீதியரசர் வழங்குவதற்கு முன்னர் அந்தத் தீர்ப்பினைப் பலரும் ஆவலுடன் எதிர்பார்ப்பதை ஒத்த ஒரு சூழ்நிலையே அவ்வேளையில் நிலவியது.

சபாநாயகர் தமது தீர்ப்பினை அறிவித்த உடனேயே எதிர்க்கட்சித் தலைவர் எழுந்து நாடாளுமன்றத்தில் ஆதிபத்தியத்தைப் பாதுகாப்பதற்காக சபாநாயகருக்கு நன்றி தெரிவித்தார். அதன்பின்னர் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

கடந்த சில நாள்களாக குற்ற விசாரணைப் பிரேரணை மற்றும் உயர் நீதிமன்றத்தின் தடையுத்தரவு குறித்து நாட்டில் இரு கருத்துக்கள் நிலவின. இவ்வாறான நிலையில் அரசாங்கக் கட்சி சபாநாயகருக்கு நன்றி தெரிவிக்கும் எனப் பலர் எதிர்பார்க்கவில்லை.

பிரதமர், சபாநாயகருக்கு நன்றி தெரிவித்தது மாத்திரமன்றி சபாநாயகர் தனது உரையில் ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை பல தடவைகள் நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கு எவரும் அச்சுறுத்தல் விடுக்க முடியாது எனத் தெரிவித்த போது அரசாங்கக் கட்சி உறுப்பினர் பலர் பல தடவைகளில் மேசை மீது தட்டி ஆதரவு தெரிவித்தனர்.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவுக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டுவரப்பட்டதற்காக மட்டுமன்றி அவர் பிர



பிரதம நீதியரசர்

தம நீதியரசராக நியமிக்கப்பட்டது தொடர்பாகவும் நாட்டில் வாதப் பிரதிவாதங்கள் நிலவியதால் இந்த விடயம் முக்கியத்துவம் பெறுகிறது.

சரத் என் சில்வாவுக்கு எதிராக அண்மைக் காலத்தில் பத்திரிகைகளில் பல குற்றச்சாட்டுகள் வெளிவந்தன. அந்தக் குற்றச்சாட்டுகளில் சில அவரது தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பாகவும் ஏனையவை அவரது கடமை தொடர்பாகவும் வெளிவந்தன.

அவர் மீது இந்தக் குற்றச்சாட்டுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த வேளையிலேயே அவர் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்ட சம்பவம் ஐ.தே.கட்சியின் கவனத்தை ஈர்த்தது.

பிரதம நீதியரசருக்கு எதிராக ஐ.தே.கட்சி மற்றும் ஜே.வி.பியைச் சேர்ந்த 77 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு சபாநாயகரிடம் குற்றவிசாரணை பிரேரணை கையளித்தமை இவ்வாறான பின்னணிகளின் மத்தியிலேயே ஆகும்.

இந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் கையளிக்கப்பட்ட தினத்தன்றே அந்தப் பிரேரணை குறித்து விசாரிப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை சபாநாயகர் நியமிப்பதைத் தடைசெய்யும் விதத்தில் உயர் நீதிமன்றம் சபாநாயகருக்கு இடைக்காலத் தடையுத்தரவை விடுத்தது.

குற்றப் பிரேரணை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தினத்திற்கு முதல் நாள் அதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மூன்று மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதை அடுத்தே உயர் நீதிமன்றத்தால் அந்த இடைக்காலத் தடையுத்தரவு விடுக்கப்பட்டது.

இருப்பினும் நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளைத் தடுப்பதற்கோ அல்லது அச்சுறுத்தல் விடுப்பதற்கோ நீதிமன்றத்திற்கு எதுவித அதிகாரமும் இல்லை என்பதையே சபாநாயகரின் தீர்ப்பு எடுத்துக் கூறுகிறது.

இடைக்காலத் தடையுத்தரவு விடுக்கப்பட்டதை தொடர்ந்து பொ.ஐ.முன்னணிக்கும் ஐ.தே.கட்சிக்கும் இடையில் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவிசாரணைப் பிரேரணையானது அரசமைப்புக்கும் நீதித்துறைக்கும் இடையிலான போராட்டமாக மாறியது.

நாடாளுமன்றமே மேலாதிக்கம் கொண்டது என்பதால் நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளைத் தடைசெய்வதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டா என்ற பிரச்சினையை சிலர் எழுப்பினர்.

இது நீதிமன்றத்தின் இறைமை தொடர்பானது. எனவே நீதியரசர்களின் நடவடிக்கைகள் தொடர்பாக வேறு இடத்தில் (நாடாளுமன்றத்தில்) அது குறித்து விசாரிக்க முடியுமா என வேறு சிலர் கேள்வி எழுப்பினர்.

### நீதிமன்றின் நிலை என்ன?

இடைக்காலத் தடையுத்தரவு காரணமாக நீதியரசர்களின் நடவடிக்கைகள் தொடர்பாக விசாரிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு இல்லை எனக் கூறப்பட்டது. ஆனால் அந்த அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு உண்டு. அது குறித்துக் கேள்வி எழுப்பவோ அல்லது அதைத் தடுக்கவோ நீதிமன்றத்திற்கு அதிகாரமில்லை என சபாநாயகரின் தீர்ப்புக் கூறுகிறது.

இவை பிரச்சினைக்கு இன்னும் இறுதி முடிவு கிட்டவில்லை என்பதையே காட்டுகின்றன. தற்போது நீதிமன்றம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது? குறிப்பிட்ட மூனறு மனுக்களும் மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படும் தினத்தன்று அது குறித்து அறியமுடியுமா? அல்லது அதற்கு முன்னர் தெரியவருமா?

வேறு எவராவது நீதிமன்றத்தின் ஆணையை ஏற்காது நடந்து கொண்டால் அது நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கருதப்படும். இருப்பினும் அரசமைப்பின் நாயகரான சபாநாயகர் தொடர்பாக நீதிமன்றத்திற்கு அவ்வாறு நடவடிக்கை எடுக்க முடியுமா?

குற்ற விசாரணைப் பிரேரணைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மூன்று மனுக்கள் மீதான விசாரணைகளுக்கு என்ன நடக்கும்? நீதிமன்றத்தின் கட்டளையை மதிக்காது நாடாளுமன்றம் தீர்மானித்தது போல் நாடாளுமன்றத்தின் கட்டளையை மதியாது நீதிமன்றம் அந்த மூன்று மனுக்களையும் விசாரணைக்கு எடுக்குமா?

**தமிழில் : கஜனி**

மூன்று மனுக்களும் விசாரணைக்கு எடுக்கப்படும் தினத்திற்கு முன்னதாக நாடாளுமன்றம் குற்ற விசாரணைப் பிரேரணை தொடர்பாக இறுதி நடவடிக்கைகளை எடுத்து முடித்திருப்பின் நிலைமை எவ்வாறு அமையும்?

நீதிமன்றம் மற்றும் அரசமைப்புத் தொடர்பாக இவ்வாறான பிரச்சினை இதற்கு முன்னர் உருவாகாத காரணத்தால் இத்தகைய வினாக்கள் எவற்றிற்கும் பதிலளிக்க முடியாதுள்ளது.

எவ்வாறாயினும் நீதிமன்றத்தின் கட்டளையை ஏற்காது சபாநாயகர் நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்ததை அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏற்றுள்ளதால் பிரச்சினை பாரதூரமாகாது எனக் கருத இடமுண்டு.

நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தவர்கள் அரசுக்கு ஆதரவான சட்டத்தரணிகள் ஆவர். அரசாங்கமோ சபாநாயகரின் தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அரசாங்க ஊடகங்களும் சபாநாயகரின தீர்ப்புக்கு எதிராக எதுவித பிரசாரங்களையும் மேற்கொள்ளவில்லை. எனவே நிலைமை மோசமாக வாய்ப்புகள் குறைவே.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவை அப்பதவியில் இருந்து நீக்குமாறு மூவர் தாக்கல் செய்த வழக்கின தீர்ப்பு சபாநாயகர் தனது தீர்ப்பை நாடாளுமன்றத்தில் வழங்கிய சிறிது நேரத்தின் பின்னர் வெளியானது. நீதிமன்றத்தின் அந்தத் தீர்ப்பில் "பிரதம நீதியரசரை பதவியில் இருந்து நீக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு மட்டுமே உண்டு" எனக் கூறப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசரைப் பதவியில் இருந்து நீக்குவது தொடர்பாக நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற விசாரணைப் பிரேரணை தொடர்பாக நடவடிக்கை எடுப்பது என்ற சபாநாயகரின் முடிவும் மேற்படி வழக்கின் தீர்ப்பும் ஒன்றுக்கொன்று பொருந்துகின்றன. ★

---

# எல்லோரும் வாழ அன்பு செய்யுங்கள்

அன்பு என்பது தனித்துவம் மிக்க மனிதப் பண்பு. அது இன்பம் தருவது; துன்பம் அகற்றுவது; பண்பின் தன்மையை வெளிப்படுத்துவது. இன்னார் இனியார் என்றில்லாமல் எல்லாரிடத்தும் தூய அன்பை நாம் செலுத்தவேண்டும். உயிர் அன்பு மாயமானது. எல்லா உயிர்களும் தத்தமக்கிடையே அன்பைப் பகிர்ந்து வாழ வேண்டுமென்பதே இயற்கையின் நியதியாகும். தாய் தன குழந்தைகளிடத்தில் அன்பைக் காட்டுகின்றாள். பிள்ளைகள் தாயின் அன்பை உணர்ந்து தாமும் பிறரிடத்து அன்பைச் செலுத்துகின்றனர். தனிமனிதன், குடும்பம், சமுதாயம், நாடு, உலகம் என்றவகையில் இந்த அன்பு விரிந்து பரந்து செல்கின்றது. தூய அன்பிற்கு வேற்றுமை கிடையாது, பிரிவினை கிடையாது, எல்லைகள் கிடையாது பாசம், பற்று, காதல், நேயம், கசிவு என்ற எல்லா உணர்வுகளும் அன்பிற்குள் அடக்கமாகி எல்லாவற்றையும் இணைத்தும் அனைத்தும் கருணை; அருள் என்ற அன்புப் பெருக்காகப் பெருகி காலம், இடம் என்றவற்றைக் கடந்து ஞாலம் முழுதும் முழுக்காட்டும்.

**ஞானக்கதிர்**

இந்த அன்பை முதலாகக் கொண்டு அதன்வழி நிற்கும் அல்லது செயற்படும் உடம்பே உயிர் உள்ள உடமபாகக் கருதப்படும். அப்படி அன் பில்லாத உயிர் உள்ள உடம்பு எலும்பும் தோலும் போர்த்த உயிரற்ற உடம்பாகவே கருதப்படும்.

இதனை -

*"அன்பின் வழிய(து) உயர் நிலை, அஃதிலார்க்(கு) என்பு தோல் போர்த்த உடம்பு"* என்றார் வள்ளுவர்.

அதனோடு அமையாது "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள்" என்றும் "அன்பிலார் எல்லாம் தமக்குரியவர்" என்றும் கூறியுள்ளார். ஒருவன் பல உயிர்களிடத்தும் பாகுபாடற்ற அன்பை வைப்பானேயானால், அவன் பகைவராலும் விரும்பப்படுவான், அன்றியும் பலரும் இவனை நாடி வருவர். அவனுக்குச் சிறப்பும் மதிப்பும் உயரும். அன்பானது துன்பம் செய்தவருக்கும் இன்பத்தைச் செய்யத் தூண்டும், அதனால் அன்புள்ளவன் மேல் பகைவர் வைத்த பகைமையும் நீங்கும்.

அன்பில்லாதவர்களை "அறம் சுடும்" என்று மற்றுமொரு குறளில் வள்ளவர் கூறியுள்ளார். நெருப்புச்சுடும், துப்பாக்கி சுடும், வெய்யில் சுடும், ஆனால் அறமும் சுடுமா? என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். வள்ளுவர் சுடுதலுக்குக் 'காய்தல்' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். துணியைக் காய வைக்கின்றோம். உணவைச் சமைக்கிறோம்; பொருள்களை வெயிலில் காயவைக்கின்றோம். வடையைச் சுடுகிறோம். இங்கே காய்தல், சுடுதல் என்பன ஒரு பொருளில் வழங்கப்பட்டுள்ளன. ஏற்கனவே 'நா' சுடும் (நாவினால் சுட்ட புண்) என்று வள்ளுவர் கூறியுள்ளார். எனவே "அறம்" சுடும் என்பது சரியானதே. எதையும் சுட்டால், நீர்வற்றிப் போகும் உலர்ந்து விடும், காய்ந்து விடும் அல்லவா? அதேபோல அறவழி நின்று பிற உயிர்களிடத்தில் இயலு மான வகையில் அன்பு செய்யாவிட்டால் அறமானது அன்பு செய்யாதவர்களின் உடலை, உள்ளத்தை, கல்வியைக் காய்ந்து வற்றிப்போகச் செய்துவிடும். அதாவது எலும்பில்லாத உயிரினங்களை சூரிய வெப்பம் (வெய்யில்) சுடுவது போல் அன்பில்லாதவர்களை அதன் காலப்போக்கில் சுட்டுவிடும் என்றார் வள்ளுவர்.

*"என்பிலதனை வெயில் போலக் காயுமே*
*அன்பிலதனை அறம்"* - என்பது குறள்.

என்பு உடலுக்கு தென்பு - அந்தத் தென்பாகிய என்பில்லாதவற்றைச் சூரிய வெப்பம் சூடும். அதேபோல் உயிருக்குத் தென்பாகிய அன்பில்லையானால் அறம் சுடும். தன் நெஞ்சு அறிவது பொய்த்தால் "தன் நெஞ்சே தன்னைச் சுடும்" என்பதும் வள்ளுவர் கருத்து. நல்ல அன்புள்ளம் கொண்டவர்கள் அன்பாகப் பேசுவர். நல்ல அற நெஞ்சம் கொண்டவர்கள் நெஞ்சார அன்பு செய்வர். என்வே இவை இரண்டும் பிழைத்தால் நாக்கும் நெஞ்சும் நம்மைச்சுடும்தான். சுடுவதற்கு வெப்பமோ, சன்னமோ தான் தேவை என்றில்லை. உணர்வுகளினால் கசிவு எங்கே அற்றுப் போகிறதோ அங்கே வெப்பம் அதிகரித்துச் சுடத் தொடங்கும். இந்தச் சூடு நாளாந்தம் சுட்டுச் சுட்டு நம்மைத் தோய்க்கும்.

'அன்பினால்..... ஆவியோடு ஆக்கை, ஆனந்தமாய்க் கசிந்து உருகினால்" இன்பவாழ்வு உயரும். உயிர்களுக்கு அன்பு செய் வதையே இறைவன் விரும்புகிறார்.

*"எவ்வுயிரும் பராபரன் சந்நிதி*
*இலங்கும் உயிர்உடல் அனைத்தும் ஈசன் கோயில்"*

எனவே அன்பு செய்யுங்கள்! அன்பு செய்யுங்கள்!
எல்லோரும் வாழ்க!
இன்பமே சூழ்க!

**தீவகன்**

# குட்பை - மக் வே!



சிறையில் 1997 இல்

**1995** ஏப்ரல் பத்தொன்பதை அமெரிக்கா வாழ்க்கையில் என்றும் மறக்க முடியாது. அமெரிக்க வரலாற்றில் மிகப்பெரிய குண்டு ஒன்று ஒக்லஹோமா நகரத்தைச் சின்னாபின்னமாக்கிய அந்நாளில் 168 அப்பாவி உயிர்கள் பலியாகி இருந்தன. அவற்றில் ஐந்து வயதிற்குட்பட்ட பத்தொன்பது சிறார்களும் அடங்குகின்றார்கள் என்பது உலகின் இதயத்தைத் உருக்கிநின்ற செய்தியாகும்.

அன்றைய கதாநாயகன் திமோதி மக் வே பொழுது விடியும் தருணம் தனது டிறக்கின் ஆசனத்தில் இருந்து கொட்டாவியுடன் எழுந்தான். றைடரிடம் இருந்து வாடகைக்குப் பெற்ற அந்த டிறக்கின் சொகுசான ஆசனத்தைப் படுக்கையாக்கி அதில் ஒரு குழந்தைபோல அவன் சுருண்டு படுத்திருந்தான். அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றிய காலங்களில் கிடைக்கின்ற இடத்தில் அது எப்படிப்பட்டதாயினும் சொகுசு கண்டு உறங்கி விட அவன் பழகியிருந்தான்.


அவனது டிறக்கின் கபினுக்குப் பின்னே சுமார் இரண்டடி தொலைவில் டிறக்கின் கொள்கலனில் சுமார் மூவாயிரத்து இருநூறு கிலோ வெடிப்பொருள்கள் உறங்கிக் கொண்டிருந்தன. மக்வே விழித்துவிட்டான். எனவே இன்னும் சிலமணி நேரத்தில் அந்த வெடிப்பொருள்களும் விழித்து விடும்.

ஆசனத்தில் இருந்தவாறே தனது காலை உணவை ஒரு றெடிமேட் பைக்கெட்டை உடைத்து உண்டான்.

## உலகை உலுக்கிய குண்டுவெடிப்பு அவன் உள்ளத்தை உலுக்காதது ஏன்?

அன்று முழுவதும் அது அவனுக்குத் தாக்குப்பிடிக்கப் போதுமானது. உறக்கத்திலும் உணவிலும் கவனமாக இருந்தால்தான் காரியத்தைப் பதறாமலும் சிதறாமலும் பண்ண இயலும் என்பது அவனது எண்ணமாக இருந்தது. இராணுவ வாழ்க்கை தந்த பாடமும் அதுதான்.

இறங்கி வந்தான். கம்பீரமாக தனது வாகனத்தை ஒரு சுற்று வலம் வந்தான். ரயர்களைக் கவனித்தான். காற்று



தகர்ந்து போன ஒக்லஹோமா நகரம்

அழுத்தம் சரியாக இருந்ததை உறுதிப்படுத்திக் கொண்டான். கொள்கலனின் கதவுகள் சரிவரப் பூட்டப்பட்டதை உறுதிசெய்து கொண்டான்.

இரவே எரிபொருள் மற்றும் திரவமட்டங்களைச் சரிவர நிரப்பியிருந்தான். ஒரு பாரிய ஒப்பரேஷனுக்கு அவன் ஒரு தனிமனிதனாகத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டான். வாகனத்தில் ஏறிக் கம்பீரமாக அமர்ந்து கொண்டதும் அவனது விரல் நுனிகள் இக்னிஷன் திறப்பைத் திருகிக் கொண்டன. எஞ்சின் பற்றிக் கொண்டது. கியர் லிவரை அழுத்தி சில்லுகளை உருள விட்டான். பிரதானசாலையில் ஒக்லஹோமா நகரத்தை நோக்கி அவனது டிறக் சற்றே வேகம் பிடித்தது.

மிகவும் நிதானமாக வாகனத்தைச் செலுத்தினான். எந்தத்தவறோ விபத்தோ சந்தித்து விடக்கூடாது. அது காரியத்தைக் கெடுத்துவிடும் என்பதில் குறியாக இருந்தான். இந்த 3,200 கிலோ வெடிப் பொருள்கள் வெறுமனே பொலீசாரிடம் பிடிபட்டு விடக்கூடாது அல்லவா?

நேரமோ சரியாக 8மணி 50 நிமிடங்கள் ஆகிவிட்டது. டிறக் நகரத்தினுள் நுழைந்துவிட்டது. சுமார் ஐந்து லட்சம் மக்கள் வாழும் நகரம் அது. இதில் ஆகக்கூடியது எத்தனை பேரை



மக் வே சிறுவனாக 1969 இல்

காவுகொள்ளுவது சாத்தியமாகும்? சரியாக ஒன்பது மணிக்கு அவன் குறிவைத்த இடத்தில் டிறக்கைக் கொண்டுபோய் சரிவர நிறுத்தியாக வேண்டும். அவ்விடத்தில் அப்போது வேறெந்த வாகனமும் நிறுத்தப்படாமல் காலியாக இருத்தல் வேண்டும்.

ஏற்கெனவே தான் தப்பிப் போவதற்கு வசதியாக ஒரு காரை தனது இலக்கிற்குச் சற்றுத் தொலைவில் தயாராக நிறுத்தி வைத்திருந்தான். அந்த மஞ்சள் நிற மேர்க்குரி அவ்விடத்திலேயே காத்துநிற்குமா? அல்லது யாராவது களவாடிப் போயிருப்பார்களா?

எத்தனை ஏக்கமான கேள்விகள் மனதினில் எழுகின்றன. அவனது குண்டை வெடிக்க வைக்க இரண்டு திரிகளை அவன் தயாராக வைத்திருந்தான். முதலாவது திரி எரிந்து குண்டை அடைய எடுக்கும் நேரம் ஐந்து நிமிடங்கள். இரண்டாவது திரிக்கு இரண்டு நிமிடங்கள் போதுமானவை. எனவே இரண்டுதிரிகளையும் பற்றவைக்க மூன்று நிமிட வித்தியாசம் இருக்க வேண்டும். ஒன்று தவறினாலும் மற்றது காரியத்தை ஒப்பேற்றிவிடும்.

குறித்த இடத்திற்கு சற்று முன்னரே வாகனத்தை சாலை அருகிற்கு எடுத்து நிறுத்தி நீண்ட திரியை சிகரெட் லைட்டர் கொண்டு பற்ற வைத்தான் அவன். மீண்டும் வாகனம் அசையத் தொடங்கியது. திரி சீறி எரியத் தொடங்கிவிட்டது. இனி அதனைத் தடுக்கக் கடவுளாலும் இயலாது.

அதற்கிடையில் எதிர்பாராத விதமாக வீதிஒழுங்கு சமிக்ஜை விளக்கு சிவப்பாக மாறிவிட்டது. இனி அது பச்சையாக மாறும்வரை காத்திருக்க வேண்டும். வாகனம் அசைய இயலாது. இலக்குவைத்த கட்டடம் கண்ணில் பட்டது. இரண்டு நிமிடத் திரியையும் பற்ற வைத்தான் அவன். இனி விளக்குப் பச்சையாக மாறாவிட்டால் புகையும் திரிகள் காத்திருக்குமா? சரியாக வாகனம் 'அல்பிரட் பீ முறா பெடறல் பில்டிங்' முன்பாக வந்து திரும்பியது. அவன் எதிர்பார்த்த இடமும் காலியாக இருந்தது.

அப்பாடா நெஞ்சில் நிம்மதிப் பெருமூச்சு விட்டான் மக் வே. மிகவும் நிதானமாக சற்றும் பதற்றமில்லாமல் டிறக்கை அவன் உரிய இடத்தில் நுழைத்து நிறுத்தி வைத்தான். சரியாக அந்தக் குழந்தைகள் காப்பகத்திற்கு நேரே கீழே அந்த டிறக் நின்றிருந்தது. தலைக்கு மேலே குதூகலிக்கும் குழந்தைகள் பற்றி அவன் உண்மையில் தெரிந்திருக்கவில்லை.

அவன் அந்த இடத்தை ஏன் தெரிவுசெய்தான்? அது ஓர் அரச கட்டடம். அவ்வாறான பிஸியான பல அரச கட்டடங்கள் பல்வேறு அமெரிக்க நகரங்களில் இயங்கின. ஆனாலும் முறா பில்டிங் அவனது முதல் தேர்வு ஆக இருந்தது. காரணம் முகப்பு முழுவதும் கண்ணாடியால் ஆனதால் கட்டடத்தினுள் நுழைந்து தாக்குதல் நடத்துவதற்குக் குண்டுக்கு அதிகம் வேலைப்பழு இருக்காது.

கட்டட முகப்பில் பெரிய வெளி இருப்பதால் குண்டு வெடித்த இடம் படப் பிடிப்புக்கு ஏற்றதாய் இருக்கும் எனவும் அவன் கணித்திருந்தான். பிடிக்கப்படும் படங்கள் கோரமாக இருக்க வேண்டும். அது உலகின் கவனத்தைக் கோரவேண்டும், காட்சி அமைப்பாக இருக்கவேண்டும் என்றெல்லாம் அவன் கனவு கண்டான்.

அவனது மனம்போல வாகனம் சரியான இடத்தில் நிறுத்தப்பட்டு விட்டது. ஏற்கெனவே திரிகள் புகைந்து குண்டை நெருங்கிக் கொண்டிருக்கின்றன. இரண்டில் எந்தத் திரி குண்டை முதலில் தொடுமோ? இறங்கித் தனது வாகனத்தை அழிவுத் தயாரிப்பை கடைசியாக ஒரு தடவை ஆவலுடன் பார்த்தான். விறுவிறு என்று அவ்விடத்தை விட்டு நடக்கலானான்.

சுமார் நூற்றி ஐம்பது மீற்றர் தொலைவில் ஓர் ஓடையில் அவன் நுழைந்து கொண்டான். நேரம் சரியாக ஒன்பது இரண்டு ஆக இருந்தது. ஓசை கேட்கவில்லை என்கின்ற ஏக்கம் படர ஆரம்பித்தது. ஏதாவது பிசகிவிட்டதா என ஒருகணம் கலங்கினான்.

மறுகணம் வெடியோசை காதைப் பிளந்தது. கட்டடம் நொருங்கியது. அவன் நின்ற இடத்தில் இருந்து சற்று நிலத்தைவிட்டுத் தூக்கப்பட்டான். கண்ணாடிச் சிதறல்களும் செங்கட்டிகளும் அவ்விடத்திலும் கொட்டுப்பட்டன. மின் கம்பிகள் வீதியில் விழுந்தன. தப்பித் தடுக்கி விலக்கி நடந்தான். புகை மூட்டம் முறா பில்டிங்கைச் சூழ்ந்து கொண்டது. தீ அதனை அரவணைக்கத் தொடங்கியது. கணப் பொழுதில் அழிவு அமெரிக்காவை உலுக்கி எடுத்தது.

நிதானமாக தான் காரை நிறுத்தி வைத்த இடத்திற்கு வந்து சேர்ந்தான் மக் வே. கார்ப் பார்க்கில் அவன் நிறுத்திவிட்ட இடத்தில் அது நின்றிருந்தது. சற்றுச் சிரமப்பட்டே அதன் எஞ்சின் பற்றிக் கொண்டது. பாவம் அதிர்ச்சி போலும். எல்லோரும் பதறிக்கொண்டு ஓடுவதைக் கண்டு குதூகலித்தான். மனம் நிறைந்து இருந்தது. அரசுக்கு ஒரு பாடம் படிப்பித்துவிட்ட திருப்தி அவனது இறுக்கமான முகத்திலும் தெரிந்தது.

காரைக் கிளப்பிக்கொண்டு நகரத்தை விட்டு மெதுவாக நழுவிக் கொண்டிருந்தான் அவன். அநேகமாக எல்லோரும் நகரத்தை நோக்கி ஓடிவந்துகொண்டிருந்தார்கள். வாகனத்தை விட்டிறங்கி குண்டுவெடித்த இடத்தை நோக்கி ஓடினார்கள். அவன் மட்டும் விலகிக் கொண்டிருந்த பிரமை ஏற்பட்டது.

நாட்டுப் புறத்தினூடாக அவனது பயணம் சுமார் 100 கிலோ மீற்றர்களை தாண்டிவிட்டது. எங்கும் குண்டு வெடித்த செய்தி பரவியிருக்கும் என அவன் ஊகித்தான். எவருடனும் பேச சந்தர்ப்பம் கிட்டவில்லை. பிரதான சாலையில் அவன் சென்றுகொண்டிருந்த போது தொலைவில் ஒரு பொலீஸ் வாகனம் நின்றுகொண்டிருந்தது. ஒரு பொலீஸ்காரன் அதிலிருந்து இறங்கி வீதியை வெறித்தபடி நின்று கொண்டிருந்தான். மக் வே அவனை சட்டை செய்யாது நிதானமாகச் சென்று கொண்டிருந்தான். அதி வேகமாக செல்லும் வாகனங்களை மடக்குவதே அவர்களின் நோக்கமாக இருக்கும்.

சுமார் 20 நிமிடங்கள் தொடர்ந்து காரை செலுத்திக் கொண்டிருந்தவனது கண்ணாடியில் பின்னே அதே பொலீஸ் வாகனம் தென்பட்டது. அது அவனை நெருங்கியதும் முன்னேறி சமிக்ஜையை காட்டியது. இவன் தனது வேகத்தை தணித்து அதன் பின்னே நிறுத்திக்கொண்டான்.

பொலீஸ்காரன் வாகனத்தில் இருந்து இறங்கிக் கொள்ளவும் மக் வேயும் தனது காரில் இருந்து இறங்கி விட்டான். பொதுவாக சாரதிகள் தமது வாகனத்தில் இருந்தவாறே பொலீஸாருக்கு பதில் சொல்லுவதே வழமை. அவனது காரின் பின்பக்க இலக்கத் தகடு இல்லாதமை பற்றி பொலீஸ்காரன் விசாரித்தான். அது இல்லாமற் போனது ஒரு பாரிய சிக்கலாக



அமெரிக்க இராணுவத்தில் 1991 இல்

மக் வேக்குப் படவில்லை. சர்வசாதாரணமாக அவனது பதில்கள் இருந்தன. தனது சாரதி அனுமதிப் பத்திரத்தை அவன் காண்பித்து இருந்தான்.

வாகனப் பதிவுக்கான ஆதாரமோ பற்றுச்சீட்டோ கூட அவனிடம் இருக்கவில்லை. எனவே துருவித் துருவி விசாரிக்கவேண்டிய தேவை பொலீஸ்காரனான ஹங்கர் என்பவனுக்கு எழுந்துவிட்டது. மக் வேயை சோதனை செய்ததில் அவனிடம் ஒரு பிஸ்ரல் கண்டுபிடிக்கப்பட்டது. அமெரிக்காவில் துப்பாக்கியை வைத்திருப்பது ஒன்றும் பெரிய புதினம் இல்லை. அது தனது உரிமை என்றே மக் வே வாதிட்டான். அவனது இடுப்புப் பட்டியில் ஒரு கத்தியும் காணப்பட்டது.

மக் வே நினைத்திருந்தால் பொலீஸ்காரனை சுட்டுவிட்டுத் தப்பியிருக்கலாம். ஆனால் தனது நிலைமையை சிக்கலாக்க அவன் கருதவில்லை. விலங்கு இடப்பட்டு கைதியாக பொலீஸ் நிலையத்தில் அவன் ஒப்படைக்கப்பட்



கொல்லப்பட்ட 168 பேரின் நினைவாலயம்

டான். உடனடியாக அவனது பெயர் கணனி பதிவேடுகளில் ஆராயப்பட்டது. எந்த ஒரு கைதோ குற்ற பதிவோ அவனிடம் இருக்கவில்லை. அவனிடம் இருந்த துப்பாக்கி இலக்கம் கணனியில் தேடப்பட்டது. அதுவும் களவு போனதாக தகவல் ஏதும் இல்லை. அவனது காரில் ஒரு வெள்ளை கடிதஉறை தவிர வேறேதும் வித்தியாசமாக அகப்படவில்லை.

சிறையில் அடைக்கப்பட்ட அவன் இலக்கத்தகடு இல்லாமல் வாகனத்தை செலுத்திய குற்றத்திற்காக நீதிமன்றத்தில் ஆஜராக்கப்பட்டு விடுவிக்கப்படுவான் என்ற நம்பிக்கையே இருந்தது. அவ்வேளை தொலைக்காட்சியில் எரியும் ஒக்லஹோமா நகர காட்சிகள் பலரது கவனத்தையும் ஈர்த்து இருந்தன. அதை மக் வே இரசித்துக் கொண்டிருந்தான். அப்போதுதான் குழந்தைகள் காப்பகம் ஒன்று சின்னாபின்னமாகிய செய்தி அவனுக்குத் தெரியவந்தது. உடல்கள் அகற்றப்படும் காட்சி பார்ப்பவர் மனதைப் பிசைந்தது. எதுவும் அவனை உலுக்கவில்லை என்பதுதான் உண்மை.

மக் வே கைது செய்யப்பட்டதும் அவன் மீதான குற்றங்கள் பட்டியலிடப்பட்டன. ரவைகளுடன் துப்பாக்கியை வைத்திருந்தமை, இலக்கத்தகடு இல்லாத வாகனத்தை செலுத்தியமை, காப்புறுதி செய்யாமை ஆகியவையே அவனது குற்றங்கள். எனினும் கணனிப் பதிவுகளின்படி இதுவே அவன் இழைத்த முதல் குற்றம். அவன் வாழ்க்கையில் கைது செய்யப்படவோ தேடப்படவோ குற்றம் சுமத்தப்படவோ இல்லை.

**மு. சிவநேசன்**

அவனது கைரேகையும் பதியப்பட்டது. அவன் ஒரு நீதிபதியின் முன் கொண்டு செல்லப்பட்டு விடுவிக்கப்பட்டு விடுவான் என்ற நம்பிக்கை இருந்தது. இது சாதாரணமான குற்றம்தான். பாரதூரமாகக் கவலைப்பட ஏதும் இருக்கவில்லை.

என்றாலும் விதி விட்டுவைக்கவில்லை. கைது செய்யப்பட்டு இரண்டு நாள்கள் கழிந்த நிலையில் அவன் சட்டத்தரணி மூலமாக உள்ளூர் நீதிமன்றத்தில் ஆஜராக இருந்த சமயம் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.


நடந்தது என்ன?

குண்டு வெடித்ததும் அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகள் செயலில் இறங்கி இருந்தார்கள். குண்டு வெடித்த இடத்தில் கிடைத்த தடயங்களில் பிரதானமானது ஒரு 115 கிலோ எடை கொண்ட வாகன அச்சு ஆகும். அதை அடையாளம் கண்டவன் மைக் பேஸன் என்கின்ற நிபுணன். குண்டு வெடித்ததும் அவ்விடத்தை நோக்கி ஓடிவருகையிலேயே அதை அவன் கண்டுவிட்டான். அதன் சிதைவுத் தன்மை அதுதான் குண்டை ஏற்றி வந்த வாகனத்துக்கு உரியது என்பதனைக் காட்டிக் கொடுத்துவிட்டது.

இரண்டொரு கட்டடங்களைத் தாண்டி வீசப்பட்டுக் கிடந்த அச்சில் காணப்பட்ட தொடர் இலக்கம் உடனடியாக வாகனப் பதிவுக் கணனிகளுக்குத் தரப்பட்டது. உடனடியாகவே வாகனம் பற்றிய விவரங்கள் தெரிந்துவிட்டது. அமெரிக்காவில் எல்லாமே கணனிமயம் என்பதால் சிக்கல்கள் இலகுவில் விடுபட்டு விடுகின்றன.

அந்த டிறக் ஒரு போர்ட் தயாரிப்பு. ஆறு மீற்றர் நீளமான கொள்கலன் ஒன்றையும் அது கொண்டிருந்தது. வாகனங்களை வாடகைக்கு விடும் றைடர் நிறுவனம்தான் இரண்டு நாள்களுக்கு முன்னர் அதை வாடகைக்குக் கொடுத்து இருந்தது. றைடரின் வாகனங்கள் சந்தேகத்துக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)




## சூரிய உதயம் ஜூலை மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை

எமது கதவுகள் திறந்திருக்கும். கொண்டாட்டங்களில் பங்குபற்றும்படி உங்களையும் அழைக்கின்றோம்.

40ஆவது ஆண்டு நிறைவை நாம் கொண்டாடும் இந்தத் தருணத்தில், உங்களது வாழ்க்கையின் ஒரு பகுதியாக - எப்போதும் இருந்து வந்த, எப்போதும் இருக்கும் வங்கியின் அரவணைப்பை அனுபவிக்கவென எங்களுடன் இணைந்து கொள்ளுமாறு உங்களை வரவேற்கின்றோம்

மக்கள் வங்கி
40
ஆண்டுகள்

நாற்பது வருடப் பெறுபேறுகள்
சுபீட்சத்தோடு கூடிய எதிர்காலம்.

(C/17250)

அதியுயர் தரம் கொண்ட
**டயமண்ட் சிமெந்து**
**(DIAMOND CEMENT)**
மீண்டும் யாழ்ப்பாணம் சந்தைக்கு
அத்துடன் அதியுயர் தரம் கொண்ட
**டயமண்ட் கூரைத் தகடுகளையும்**
**(CORRUGATED ASBESTOS SHEETS)**
*அறிமுகம் செய்கின்றோம்.*

*சிறிய முதலீட்டு வியாபாரிகளுக்கு லங்கா சிமெந்து நிறுவனம் வழங்கும் ஒரு வெகுமதி.*

- ★ இருநூறு சிமெந்துப் பொதிகளுக்கு மேல் வாங்குபவர்களுக்கு மொத்த விற்பனை விலை
- ★ கூரைத் தகடுகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் வேண்டிய அளவுகளில்
- ★ தேவையான இடத்திற்குக் கொண்டு செல்வதற்கு வாகன வசதி

உங்களுக்குத் தேவையான சிமெந்தையும் கூரைத்தகடுகளையும் பெற்றுக்கொள்ள இணுவில், கொக்குவில், நெல்லியடி, கல்வியங்காடு ஆகிய இடங்களில் உள்ள எமது விற்பனை நிலையங்களை நாடவும்.

**வரையறுக்கப்பட்ட லங்கா சிமெந்து**
(அரசியலமைப்பு அலுவல்கள், கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ்)

தலைமைச் செயலகம்
*130, டபிள்யூ.ஏ.டி.இராமநாயக்கா மாவத்தை, கொழும்பு - 02.*
தொலைபேசி இல: 447746 - 541358
பக்ஸ் இல: 447541
மின் அஞ்சல் இல: lclcemen@sltnet.lk

கிளைச் செயலகம்
"திருப்பதி"
*கே.கே.எஸ்.வீதி, இணுவில், சுன்னாகம்.* (C/17248)

# ஆலய அடிக்கல் நடும் வைபவம்

யாழ்ப்பாணம்,ஜூன்29

கோண்டாவில் மேற்கு பாரதி வீதியில் உள்ள ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வசந்தமண்டபத்திற்கான அடிக்கல்நடும் விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஆலயஉற்சவகாலக் குருக்கள் சிவஸ்ரீ ஸ்ரீஸ்கந்தராஜா குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளருமான க.மணிபல்லவராஜன் அடிக்கல்லை நட்டு வைக்க உள்ளார். (க-4)

## நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாத தினத்தில்

# ஏட்டிக்குப் போட்டியாக பேரணிகளை பொ.ஐ.மு. - ஐ.தே.க. நடத்தத் திட்டம்

அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் தினத்தன்று கொழும்பில் ஏட்டிக்குப் போட்டியான ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்த ஐ.தே.கவும்-பொதுஜன ஐக்கிய முன்னணியும் திட்டமிட்டு வருகின்றன.

அன்றைய தினம் மூன்று லட்சம் ஆதரவாளர்களைக் கொழும்புக்கு அழைத்து வர ஐக்கிய தேசியக் கட்சியும் அதற்குப் போட்டியாக 5 லட்சம் ஆதரவாளர்களைக் கொழும்புக்கு அழைத்துவர பொ.ஐ.முவும் திட்டமிட்டுள்ளன என்று தெரிய வந்துள்ளது.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற உள்ளக அமைச்சரவைக் கூட்டத்தில் இதுபற்றி விரிவாக ஆராயப்பட்டதாகக் கூறப்படுப்படுகிறது. (க)

# குட் பை - மக்.....

(8ஆம் பக்கத் தொடர்சி)

இடமின்றி அமெரிக்கா முழுவதும் ஓடித்திரிகின்றன. 1993இல் அமெரிக்காவின் மனற்றன் நகர உலக வர்த்தக நிலையத்தின் குண்டு வெடிப்பிலும் றைடரின் வாகனமே பயன்படுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

றைடரின் பதிவுகளின்படி Robert Kling என்பவன் அந்த வாகனத்தை வாடகைக்குப் பெற்று இருந்தான். எனினும் அவன் தனது சொந்தப் பெயரைக் கொடுத்திருக்கமாட்டான் என்பது இப்போது தெரிந்த விடயமே. றைடரிடம் துளைத்துத் துளைத்து வாகனத்தைப் பெறவந்த ஆளின் சாயலை வரைந்துவிட்டார்கள் உளவுத்துறை நிபுணர்கள்.

படம் றைடருக்குத் திருப்தியாக அமையும்வரை அவர்கள் ஓயவேயில்லை. படத்துடன் கடைக்குக் கடை வீட்டுக்குவீடு ஹோட்டலுக்கு ஹோட்டல் என அலையவும் அவர்கள் தொடங்கினார்கள். அலைச்சல் கைமேல் பலனைக் கொடுத்து விட்டது. அதுவும் குண்டு வெடித்த மறுநாளே மாலையில் அடுத்த மாநிலமான கென்ஸாஸில் இருக்கும் Dreamland Motel என்ற ஹோட்டல் முகாமையாளரான ஒரு பெண் படத்துக்கு உரியவன் தம்மிடம் வந்து தங்கியதாகக் கூறிவிட்டாள். ஆனால் அவனது பெயர் றொபேட் கிளிங் அல்ல என்றும் திமோதி மக் வே எனவும் துல்லியமாக அவள் கூறி விட்டாள்.

மீண்டும் திமோதி மக் வேயை கணனிகளில் தேடத் தொடங்கிய அதிகாரிகளுக்கோ அதிர்ச்சி காத்திருந்தது. அவனது பெயர் முதல் நாளும் கணனிக் குற்றவாளிகளின் பட்டியலில் தேடப்பட்டது தெரிய வந்தது. ஹங்கா என்ற பொலஸ் அதிகாரி அவனைக் கைது செய்து சிறையில் வைத்ததும் தெரியவந்துவிட்டது.

சில்லறைக் குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்ட மக் வேயின் கைது, இப்போது முக்கியத்துவம் பெறத்தொடங்கியது. ஏப்ரல் இருபத்தொன்று அன்று காலையே அதாவது குண்டுவெடித்த இரண்டாம் நாளே மக் வே புலனாய்வு அதிகாரிகளினால் விசாரிக்கப்பட்டான். இவ்வளவு கெதியில் குற்றவாளி கையில் கிடைப்பான் என எவரும் எதிர்பார்க்கவில்லை.

மக் வேயின் இச்செயலுக்கு அவன் அரசுமீது கொண்ட வெறுப்புக் கொள்கையே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. அவனது வாதங்கள் எவராலும் ஏற்கப்படவில்லை. அமெரிக்க அரசுக்கு ஒரு பாடம் புகட்டும் அவனது திட்டம் முற்றிலும் அப்பாவிகளின் மரணத்தில் பிசுபிசுத்துப் போனது என்றே கூற வேண்டும்.

வளரும்போதே மக் வேயின் வாழ்க்கையில் விரக்தி குடிகொண்டு விட்டது. பெற்றோரிடம் இருந்து அன்பு அவனுக்குக் கிடைக்கவில்லை. அவர்களின் இயந்திர வாழ்க்கையும், நாளாந்தச் சச்சரவுகளும் இறுதியில் விவாகரத்தும் இவனை முரடனாக்கி விட்டன என்றால் மிகையாகாது. சின்ன வயதிலிருந்தே பேரனான எட் மக் வேயிடம் இவன் நெருங்கிப் பழகியிருந்தான். எட்டின் பொழுது போக்கே துப்பாக்கி சுடு வதுதான். எனவே தானும் அதில் ஈடுபடத் தொடங்கினான் மக் வே.

பள்ளிப் பருவத்தில் மக் வேயின் மதிநுட்பம் (IQ) மிக அதிகமாகவே இருந்தது. அதனை நெறிப்படுத்த எவராலும் இயலாமற் போய்விட்டது. எதிலும் பொறுமையாக நிலைத்து நின்று தாக்குப்பிடிக்க அவனால் இயலுவதில்லை.

எப்போதும் துப்பாக்கி பற்றிச் சிந்திக்கும் அவனுக்கு வாய்த்த பாதுகாப்பு அலுவலர் வேலை பசிக்கு ஏற்ற தீனியாக அமையவில்லை. எனவே அமெரிக்க இராணுவத்தில் இணைந்து கொண்டான். சாதாரண சிப்பாயாக இருந்தாலும் ஆயுதங்கள் பற்றிய சஞ்சிகைகள் புத்தகங்களை வாசிப்பதில் அவன் காட்டிய அதீத ஆர்வம் சக சிப்பாய்களைப் பிரமிக்க வைப்பதுண்டு. தனது அணியில் சிறந்த இராணுவ வீரன் என்கின்ற சாதனையையும் மக் வே எப்போதும் தனதாக்கிக் கொண்டான்.

1991 இல் ஈராக் குவைத்மீது படையெடுத்தபோது அமெரிக்கா இராணுவத்தை அனுப்பி வைத்தது. அந்த அணியில் மக் வேயும் இடம் பெற்று இருந்தான். அங்குதான் அவனது துப்பாக்கி மனிதத் தலைகளை உருட்டியது எனலாம். மூன்று மாதங்கள் போர்க்களத்தில் நின்றுவிட்டு அமெரிக்கா திரும்பியபோது அவன் தளர்ந்து போனான். உடலும் மனமும் சோர்ந்துவிட்டன. உள்ளே இருந்த அவனது அரச எதிர்ப்பு உணர்வுகள் விரக்தியாக வெடிக்கலாயின. 1991இல் அவன் படையை விட்டு விலகிவிட்டான்.

அரசின் அநியாயங்கள், அட்டூழியங்கள் என்றெல்லாம் பெரிதாகத் தன்னை அலட்டிக் கொண்ட மக் வே தனது இராணுவக்கால நண்பனான நிக்கொலஸிடம் இக்குண்டு வெடிப்பை நிகழ்த்த உதவி கோரியிருந்தான். பெரிதாக உடன்பாடு காணாத நிலையிலும் இவனுக்குத் துணைநின்ற நிக்கொலஸ் தற்போது ஆயுட் சிறையில் இருக்கின்றான்.

முதலில் அவனது மரண தண்டனை 2001ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி நிறைவேற்றப்படுவதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் இறுதி நேரத்தில் அத்திகதி யூன் மாதம் 11ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டு நிறைவேற்றப்பட்டுவிட்டது.

72 வீதமான அமெரிக்கர்கள் அவனது மரணதண்டனையை ஆதரித்து இருந்தார்கள். அவனை மன்னிக்க வேண்டும் எனவும்கூட சில இரக்க சிந்தனையாளர்கள் கேட்கத் தவறவில்லை. அவனது மரண தண்டனை நிறைவேற்றப் பட்டபோது ஒக்லஹோமா குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டவர்கள் பார்க்க அனுமதிக்கப்பட்டார்கள். உள்ளூர் தொலைக்காட்சியும் அதனை ஒளி பரப்பி இருந்தது.

குண்டுவெடித்து இரண்டாம் நாளே கைது செய்யப்பட்ட மக் வே சிறையில் இருந்த 74 மாத காலப் பகுதியில் ஒரு சந்தர்ப்பத்திலேனும் தனது செயலுக்காக வருத்தம் தெரிவிக்கவில்லை, மன்னிப்புக் கோரவில்லை என்பது பலரது மனதையும் இன்றும் குடையத்தான் செய்கிறது. ★

**சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ்**
**தேசிய பாசறை ஆவணி -2001**

### அங்கத்தவர் தெரிவு

2001 ஆவணி மாதம் 2ஆம் திகதி தொடக்கம் 5ஆம் திகதி வரை காலியில் நடைபெறவுள்ள தேசிய பாசறையில் பங்குபற்றவிரும்பும் பாடசாலை, வெளிவாரிப் பிரிவைச் சேர்ந்த யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு பிரதேசசெயலா பிரிவைச் சேர்ந்த 14 தொடக்கம் 18 வயதுக்கு இடைப்பட்டவர்களிடம் இருந்தும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் ஏற்றுக்கொள்ளப்படும். பாடசாலைப் பிரிவுகளாயின் பாடசாலை அதிபரின் சிபார்சுடன் அனுப்பி வைக்கவும். ஏனையோர் நேரில் தொடர்புகொள்ளவும். எமது பகுதியில் உள்ள மாநகர சுகாதாரத் தொண்டரும், ஏனைய சுகாதாரத் தொண்டரும் சென். ஜோன்ஸ் பரீட்சையில் பங்குபற்றியவர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.



2000 ஆம் ஆண்டு தேசிய பாசறையில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான சிறந்த மாவட்டத் தெரிவில் வடமாகாணத்தைச் சேர்ந்த எவருக்கும் கிடைக்காத போதும் யா/கன்னியர் மடம் மகாவித்தியாலயப் பிரிவைச் சேர்ந்த மாணவி செல்வி மேரி டியூலா சிறந்த தாதியராகத் தெரிவு செயயப்பட்டு தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

மேலே காணப்படும் படத்தில் சென். ஜோன்ஸ் அம்புலன்டஸ் தளபதி Dr. ஜெ. ஜி. ஜெயதிலகா, மாவட்ட ஆணையாளர் திரு. எஸ். செல்வரஞ்சன் மற்றும் திரு. ஆர். அசோகன் ஆகியோருடன் செல்வி மேரி டியூலா காணப்படுகின்றார். இச்செலவைப் பொறுப்பேற்ற 2000ஆம் ஆண்டு பாசறையில் பங்கு பற்றிய மாணவர்களின் பெற்றோருக்கு எமது நன்றிகள்.

இவ்வாண்டும் இதேபோன்று ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

*முக்கிய குறிப்பு:* 2001 சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் தேசிய பாசறை என்ற பெயரால் யாழ்ப்பாணம், நல்லூர், தீவகம் ஆகிய பகுதிகள் எமது பிரதேச செயற்பாட்டிற்கு உட்பட்ட பகுதிகளாகும். இப்பகுதிகளில் உள்ள வர்த்தக நிறுவனங்களோ, பொது மக்களோ தேசிய பாசறை என்ற பெயரால் நிதியுதவி கோரி வந்தால் வழங்கவேண்டாமெனத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட ஆணையாளர்,
**சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ்,**
**யாழ்.தெற்கு பிரதேசம்.**

பிரதேச தலைமையகம்,
ஸ்ரேசன் றோட், கொக்குவில். (89541)

**56ஆவது பிறந்தநாள் வாழ்த்து**

*இலங்கை மாதாவின் பிள்ளைகளாகிய தமிழ், முஸ்லிம், சிங்கள இனத்தவரிடையே சமாதானம், சகோதரத்துவம், சமதர்மம் நிலவ உழைத்துவரும்*
*அதி உத்தம ஜனாதிபதி*
**திருமதி**
**சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க**
*அவர்களின் சேவை, அரசியல் தலைமைத்துவம் ஆகியவை இந்நாட்டிற்கு தொடர்ந்து கிடைத்திட அவரின் 56 ஆவது பிறந்தநாளாகிய இன்று (29.06.2001) அவர் பல்லாண்டு காலம் வாழ்கவென இதயபூர்வமாக வாழ்த்துகின்றோம்.*



**வேல்முருகு தங்கராசா**
பிரதம அமைப்பாளர்,
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நிர்வாகம், யாழ். மாவட்டம்.
(C/17247)

# அபிவிருத்திப் பணிகளைச் செய்ய

# மாநகர சபையிடம் நிதி இல்லை

## மாதாந்தக் கூட்டத்தில் முதல்வர் அங்கலாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

நிதிப் பற்றாக்குறையினால் யாழ். மாநகர சபையின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னேடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது—இவ்வாறு நேற்று நடைபெற்ற யாழ். மாநகர சபையின் மாதாந்த கூட்டத்துக்குத் தலைமை வகித்து உரையாற்றிய முதல்வர் என். ரவிராஜ் தெரிவித்தார்.

சபைக் கூட்டத்துக்கு முன்பதாக மாநகர சபைக் கீதத்தை இசைத்து ஒலி நாடாவில் பதிவு செய்த கலைஞர்கள், சபை உறுப்பினர்களினால் கௌரவிக்கப் பட்டனர்.

முதல்வர் என். ரவிராஜ் தொடர்ந்து தனது உரையில் கூறியதாவது:-

ஆறுமாத காலமாகி விட்ட போதும், இற்றைவரை மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் 5 லட்சம் ரூபாவே மாநகர சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு, தமிழ் விவகார அமைச்சர் மற்றும் வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோரிடம் 6 கோடி 60 லட்சம் ரூபாவுக்கான மதிப்பீட்டு அறிக்கையை கடந்த டிசெம்பர் மாதம் கையளித்திருந்தோம்.

'றான்' நிறுவனமும் இன்று வரை இந்த ஆண்டுக்கு மாநகர சபைக்கு எந்த விதமான நிதி ஒதுக்கீடுகளையும் செய்யவில்லை.

யாழ்ப்பாணம் நவீன சந்தைக்குக் கடந்த வருடம் 'றான்' நிறுவனத்தினால் 80 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது.

இந்தவேலையை முற்றாகச் செய்து முடிப்பதற்கு ஒரு கோடி ரூபா தேவை. 50 லட்சம் ரூபா தருவதாகக் கூறப்பட்டது ஆனால் இன்று வரை தரப்படவில்லை.

நாங்கள் கேட்க வேண்டிய இடங்களில் எல்லாம் நிதியைக் கேட்டுக் கொண்டே இருக்கின்றோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, நாடாளுமன்ற உறுப்பினர்களினால் வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து 10 லட்சம் ரூபா ஒதுக்கித் தருவதாகக் கூறப்பட்டது, ஆனால் அவர்களுக்கு இதுவரையும் நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்பட வில்லை.

நிதி ஒதுக்கீடு கிடைக்காத போதும் கடந்த ஆறுமாத காலத்தில் சபை நிதியிலிருந்து 30 லட்சம் ரூபா பெறுமதியான வேலைத் திட்டஙகளை நிறைவேற்றியுள்ளோம்.

மணிக்கூட்டுக் கோபுரத்தைத் திருத்தம் செய்யுமாறு பிரிட்டிஷ் அரசு கேட்டுக் கொண்டதை அடுத்து திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சபையில் வேலைத் திட்டங்களை முன்னெடுக்கக் கூடிய நிதிவசதிகள் இல்லை. பன முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம், ஆளுநர் நிதி போன்ற ஒதுக்கீடுகளில் இருந்து நிதி கிடைத்தால் மட்டுமே வேலைத் திட்டங்களைத் தொடர முடியும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கு என அரசாங்கம் பல நாடுகளில் இருந்து நிதி உதவிகளைப் பெற்று வருகிறது— அந்நிதியிலிருந்து யாழ். மாநகர சபைக்குத் தேவையான நிதியை ஒதுக்கித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன் என்றும் கூறினார்.

இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த புதிய உறுப்பினர்களை சின்னத்தம்பி இரத்தினசபாபதி, ச. மரியசீலன், எஸ். கருணாநிதி, ஈ.பி.டி.பியின் புதிய உறுப்பினரான கந்தசாமி கிங்ஸ்லி கணேசன் உட்பட 17 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (க-5)

# சைவத்தமிழ் ஆய்வு நூலகம் தெல்லிப்பழையில் இயங்கும்

## விரைவில் ஆரம்பிக்க ஏற்பாடு

வலி. வடக்கு, ஜூன் 29

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அற நிதியத்தினால் சைவத்தமிழ் ஆய்வு நூலகம் ஒன்று வெகு விரைவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்திற்கு அருகில் அமையவுள்ள இந்த நூலகம் தமிழ், சைவம் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், உயர் கல்வி பெறும் மாணவர்களின் கல்விக்குமான பல்வேறு வகையான நூல்களும் இந் நூல் நிலையத்தில் வைக்கப்படவுள்ளன.

இந்த நூல் நிலையத்திற்கு வேண்டிய நூல்களில் ஒரு தொகுதியை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வழங்கியுள்ளார்.

திருமுறைகள், மெய்கண்ட சாஸ்திரங்கள், சங்க இலக்கியங்கள், இதிகாசங்கள், புராணங்கள் போன்றவை இந் நூல் தொகுதியில் அடங்கியுள்ளன.

இவை தவிர்ந்து ஆலயங்களின் கும்பாபிஷேக நூல்களும் வைக்கப்படவுள்ளன

(க-86)

# ஊடகங்களைக் கையாள்வதில் புலிகளின்பாணிநேர்த்தியானது

## ரி. பி. ஸி. சேவை புகழாரம்

லண்டன், ஜூன் 29

தொடர்பு சாதனங்கள் மற்றும் ஊடகவியலாளர் விடயங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமைப்பீடம் கொண்டுள்ள அக்கறையும், அபிமானமும் தம்மைப் பெருமை கொள்ளச் செய்வதாக லண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன (ரி. பி. ஸி.) நிர்வாகம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக அந்நிறுவனத்தின் நிர்வாகம் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் வெளியிடப்படும் 'வான்முரசு' என்ற பத்திரிகையை சுவிஸில் விற்கும் கடைகளுக்குச் சென்ற சிலர் அந்தப் பத்திரிகையைப் பலாத்காரமாக எடுத்துச் சென்றிருந்தனர். இவர்கள் விடுதலைப் புலிகளின் சுவிஸ் பணியகத்தைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளங் காணப்பட்டிருந்ததை அடுத்துத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிர்வாகம் இது பற்றி விடுதலைப் புலிகளின் உயர் பீடத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தது.

அவ்வாறான நிலையிலும் பத்திரிகை மீதான அச்சுறுத்தல் தொடர்ந்த நிலையிலும் லண்டனில் உள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகத்தின் முன்னால் 'வான் முரசு' பத்திரிகையின் ஆசிரியர் பூ. சிவகனும், தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களும் உண்ணாவிரதமிருக்கத் திட்டமிட்டு அது குறித்து விடுதலைப் புலிகளுக்கு அறிவித்திருந்தனர்.

இதனை அடுத்து, 26 ஆம் திகதி மாலையில் விடுதலைப் புலிகளின் தலைமையகம் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினருடன்தொடர்பு கொண்டு, இது பற்றிய முறைப்பாடுகள் கிடைத்ததாகவும், இது தொடர்பான விவரங்களைத் தாம் சேகரித்து வருவதாகவும், விரைவில் இந்த விவகாரத்தில் நல்லதொரு முடிவை எடுப்போம் என்றும் கூறியதுடன் உண்ணாவிரதத் திட்டத்தைக் கைவிடுமாறும் கேட்டிருந்தனர்.

இதனை மிகவும் அன்புடனும், பணிவுடனும் ஏற்றுக் கொண்டுள்ள ரி.பி.சி. நிர்வாகத்தினரும் 'வான்முரசு' ஆசிரிய பீடத்தினரும் இந்த விவகாரத்தில் விடுதலைப் புலிகளின் பொறுப்புணர்வு, அவர்கள் தொடர்பான தமது அபிமானத்தை மேலும் அதிகரிக்கச் செய்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் பத்திரிகையாளர்களின் விவகாரங்களை மிகவும் கண்ணியத்துடன் கையாண்ட இந்த விடுதலை அமைப்பு, வெளிநாடுகளிலும் அதே போக்கைக் காண்பித்துள்ளமை உலகப் பத்திரிகையாளர்களைக் கௌரவிக்கும் தன்மையையே வெளிப்படுத்துகின்றது.

இத்தகைய ஜனநாயக விழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் ஓர் அமைப்பைத் தமது இன விடுதலைப் போராட்டத்துக்கான பிரதிநிதிகளாகத் தெரிவு செய்ததன் மூலம் ஈழத் தமிழர்கள் பெருமிதம் கொள்ள முடியும்—இவ்வாறு ரி.பி.ஸி நிர்வாகம் மேலும் தெரிவித்துள்ளது. (உ)

# இடம் மாற்றம்

தென்மராட்சி, ஜூன் 29

கரவெட்டி அஞ்சல் அலுவலகத்திற்கு அருகில் இயங்கி வந்த சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற அலுவலகம் கடந்த புதன்கிழமை தொடக்கம் நெல்லியடி மகாலட்சுமி தியேட்டருக்கு அருகில் உள்ள கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

(க-117)

# கிராம அலுவலர்கள் படைஅதிகாரியுடன் கலந்துரையாடல்

நல்லூர், உடுவில், தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம அலுவலர்களுக்கான கலந்துரையாடல் 513 ஆவது படையணித் தளபதியினால் இன்று வெள்ளிக்கிழமை காலை சுன்னாகத்தில் நடைபெறவுள்ளது.

கிராம மட்டத்தில் எதிர் நோக்கப்படும் பிரச்சினைகள் மற்றும் குடும்பப்பதிவு, பிரயாண ஒழுங்குகள் சம்பந்தமாக அங்கு கலந்துரையாடப்படும் என்று கிராம அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். (க-86)

# 40 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் மக்கள் வங்கி

யாழ்ப்பாணம், ஜூன் 29

மக்கள் வங்கியின் 40ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

01-07-1961 இல் ஸ்தாபிக்கப்பட்ட மக்கள் வங்கி 01-07-2001 இல் அதன் 40 வருடகால மக்கள் சேவையைப் பூர்த்தி செய்து புதிய ஆண்டில் காலடி பதிக்கிறது. இதனை ஒட்டி மங்கள நிகழ்வு இலக்கம் 79, கன்னாதிட்டி வீதியில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் பிரதேச தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

ஆண்டு விழாவை ஒட்டி மக்கள் வங்கிக் கிளைகள் அனைத்தும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை கொடுக்கல் வாங்கல்களுக்காகத் திறந்திருக்கும். (ஐ)

# இராணுவ முகாமில் வைத்து கோப்ரல் அடித்துக்கொலை

## கேகாலைப் பகுதி மக்கள் கொந்தளிப்பு

கொழும்பு, ஜூன் 29

கேகாலைப் பகுதியிலுள்ள இராணுவ முகாம் ஒன்றின் கோப்ரல் ஒருவர் அதே முகாமிலுள்ள அதிகாரிகளால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கேகாலை கொஹேலன்வில பகுதியில் அமைந்துள்ள இராணுவ ஆயுதக் களஞ்சிய சாலையில் சேவையாற்றி வந்த ஜயரத்ன (வயது 37) என்ற ஒரு பிள்ளைக்குத் தந்தையான நபரே இவ்வாறு அடித்துக்கொலை செய்யப்பட்டவர் ஆவார்.

ஆயுதக் களஞ்சியசாலையிலிருந்து காணாமற்போன 4 பிஸ்ரல்கள் தொடர்பாக விசாரணை நடத்த இந்த இராணுவக் கோப்ரல் இராணுவப் பொலீஸாரால் மே மாதம் 12 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

விசாரணைக்கெனக் கைது செய்யப்பட்ட இவர் 42 தினங்கள் இராணுவப் பொலீஸ் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுத் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டதுடன் கடுமையாகத் தாக்கப்பட்டு சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இவரைப் பார்க்க வந்த மனைவி, பிள்ளை உட்பட உறவினர்களையும் இவருடன் பேசுவதற்கோ தொடர்பு கொள்வதற்கோ தடை போடப்பட்டிருந்தது.

நாரஹேன்பிட்டி நாவல மற்றும் கொஹேலன்வில் ஆகிய முகாங்களில் வைத்தே இவர் இவ்வாறு அடித்துத் துன்புறுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கின்றார்.

10 வருட கால இராணுவச் சேவையைப் பூர்த்தி செய்துள்ள இவருக்கு எதிராக இது வரை எந்தவிதக் குற்றச்சாட்டும் பதியப்படவில்லை என்றும், இவர் துப்பாக்கிகள் திருத்துவதிலும் அவற்றைப் பராமரிப்பதிலும் உயர் இராணுவ அதிகாரிகளின் பாராட்டைப் பெற்று வந்தவர் என்றும் கூறப்படுகிறது.

தனது கடமையைச் சரிவரச் செய்வதிலும் ஊழலில் ஈடுபடுவோரைத் தடுப்பதிலும் இவர் மிகவும் தீவிரமாக இருந்து வந்துள்ளதாக இராணுவத் தலைமையக அதிகாரி ஒருவர் கூறினார்.

இவரின் மரண விசாரணையை நடத்திய நாவல ஆஸ்பத்திரி சட்ட வைத்திய அதிகாரி பண்டார அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளதால் ஏற்பட்ட மரணம் என்று தெரிவித்தார்.

இந்த நபர் உயிர் பிரிந்து சடலமாகக் கிடந்த நிலையிலும் ஐந்திற்கும் மேற்பட்ட அதிகாரிகள் சடலத்தை அடித்து உதைத்ததாகவும் நேரில் கண்ட இராணுவச் சிப்பாய் ஒருவர் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலை தொடர்பாக இராணுவத் தளபதியின் பணிப்பின்பேரில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இரரணுவப் பொலீஸார் சிலரும், இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் சிலரும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இவரின் கொலையைக் கண்டித்து கேகாலைப் பகுதியில் மக்கள் இராணுவத்திற்கு எதிராக வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்துள்ளதுடன் சடலம் கொண்டு செல்லும் போதும் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

(க)

# பட்டப்பெயர் கூறி அழைத்தவருக்கு நேர்ந்த கதி

தென்மராட்சி, ஜூன் 26

பட்டப்பெயரைக் கூறி அழைத்ததைப் பொறுத்துக் கொள்ள முடியாத நபர் அழைத்தவரை கல்லால் அடித்துக் காயப்படுத்திய சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு 9 மணிக்கு கரவெட்டி மேற்கில் இடம்பெற்றது.

கல்லால் அடிபட்டதில் நெற்றியில் எட்டு இழை போட்ட காயத்துடன் இதே இடத்தைச் சேர்ந்த ஆழ்வாப்பிள்ளை தவராஜா (வயது 43) என்னும் நான்கு பிள்ளைகளின் தந்தை மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-117)

# புலிகள் குறிப்பிடும் இடத்தில் பேச்சு நடத்த அரசு தயார்

## அமைச்சர் ஜயரத்ன கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 29

புலிகள் இயக்கம், கூறும் திகதியில் குறிப்பிடும் இடத்தில் சமாதானப் பேச்சை நடத்த அரசாங்கம் தயாராக உள்ளது. இது தொடர்பாக புலிகளிடம் திகதியும், இடமும் அறிவிக்குமாறு கோரியுள்ளோம் என பொ.ஐ.மு. செயலாளரும், அமைச்சருமான டி. எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

புலிகள் மீதான தடைநீக்கம் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் கிடையாது. நிபந்தனையற்ற பேச்சை ஆரம்பித்த பின்னர் நிபந்தனைகள் குறித்து ஆராயலாம் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

அரசாங்கம் எந்த நிமிடமும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கத் தயாராக உள்ளது. அதற்கான இடத்தையும், திகதியையும் அறிவிக்குமாறு புலிகள் இயக்கத்திடம் கோரியுள்ளோம். அவர்கள் கூறும் திகதியில், இடத்தில் பேச நாம் தயார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

உசன், மிருசுவிலைச் சேர்ந்த திருமதி ஜெகதீஸ்வரி கனகரத்தினம் என்பவருடைய தேசிய, விசேட அடையாள அட்டைகள் இரண்டும் கடந்த 26-06-2001 இல் யாழ். பேருந்து நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து "சிவ வில்லா"உடுவில் வீதி, மானிப்பாய் எனும் முகவரியில் ஒப்படைததுதவவும். (89522)

## மணமகன் தேவை

34 வயது, அனுஷம், செவ்வாய்க் குற்றம் உள்ள, அரச உத்தியோகம் பார்க்கும் மணமகளுக்கு ஏற்ற மணமகன் தேவை. தொடர்பு:-திரு.பாலச்சந்திரன், 51,சங்கிலியன் வீதி, நல்லூர். (89491)

## ஒன்றுகூடல் அழைப்பு

அரியாலை கிழக்கில் - நாவலடி, பூம்புகார், முனங்கு; அரியாலை மத்தியில்-அரியாலை வடக்கு, தெற்கு; கொழும்புத்துறையில் - உதயபுரம், மணியம்தோட்டம் ஆகிய பகுதிகளில் (கிராமசேவையாளர் பிரிவு:-J/89, 90,94, 95,96) மீளக்குடியமர்தல் சம்பந்தமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஈ.பி.டி.பியின் யாழ். தலைமைக் காரியாலயத்தில் சந்திப்பு ஒன்று நிகழவிருக்கின்றது. எனவே மேற்குறிப்பிட்ட கிராமசேவையாளர் பிரிவின் சகல அமைப்புகளின் பிரதிநிதிகளையும் மற்றும் பொதுமக்களையும் இச் சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு அழைக்கிறோம்.

செயலாளர்,
இடம் பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கம்.

*அரியாலை.*
(C/17249)

## மணப்பெண்கள் தேவை

1949, 51, 53, 55, 56, 59, 60 ஆண்டுகளில் பிறந்தவர்கள், சவூதி சென்றோர், சுயதொழில் கொண்ட பொறுபபுகள் இல்லாத, நற்குணம் கொண்ட இந்துசமய ஆண்களுக்கு தொழில் உள்ள (ஆசிரியர்கள்) இல்லாத, செவ்வாய்த் தோஷம் உள்ள, இல்லாத, நற்குணம் கொண்ட மணப்பெண்கள் தேவை. சுயவிலாசம், முழு விவரம் இணைத்து தொடர்புகளுக்கு: விள.இல.1312, மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (89501)

## அபூர்வ ஜோதிடம்

தீவிரமான சக்தி வாய்ந்த சித்தர் ஏடுகளினால் கடுமையான அவலம் தரும் நோய் நீக்கம், எதிர்கால அதிர்ஷ்ட யோக பலனை அறிதல். சனி, ஞாயிறுகளில் 8.30 - 5.00. ஆடிய பாதம் வீதி, சரஸ்வதி மில்லேன், கொக்குவில் கிழக்கு. (89532)

## தேவை

வீடு வாடகைக்குத் தேவை. வண்ணார்பண்ணை, வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள வீடு தேவை. தொடர்புகளுக்கு: செ.துரைரட்ணம், 55/1, சீனியர் ஒழுங்கை, கலட்டி, வண்ணார்பண்ணை. (89542)

**அறிவொளி – NALLUR**

**CO-MATHS**

B.ரவீந்திரன் B.Sc.

★ நியூற்றனின் இயக்கவிதி
Sat., Sun. 2.00 - 4.00

★ வகையீட்டின் பிரயோகம்
Wed. 3.00 - 5.00

*ஆரம்பம்: 30–06–2001* (89552)

## திருமண சேவை

டாக்டர்கள், பொருளியலாளர், பட்டதாரிகள், கிளாக், பிரஜாவுரிமை பெற்ற வெளிநாட்டு மணமகன்களுக்கும், மலேசியா, சிங்கப்பூரில் பொருளியலாளராகன் கடமைபுரியும் மணமகனுக்கும், B.Sc. பட்டதாரி மணமகனுக்கும் மணமகள்கள் தேவை. திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு நாள்களில் 10.30 - 4.30 வரை சந்திக்கவும். தொடர்புகளுக்கு: கமலக்கண்ணன் திருமண சேவை, இல.3, மூத்தவிநாயகர் வீதி, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம். (89547)

## வேலையாள்கள் தேவை

கோழிகள், பூந்தோட்டம் பராமரிக்க 17 வயதிற்கு மேற்பட்ட ஆளகள (ஆணகள்) தேவை. தங்கியிருக்க வசதியுண்டு. உடன் நேரில்வரவும். தனபாலசிங்கம், 19,முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச்சந்தையடி, நல்லூர். (89543)

## இலக்கியக் கட்டுரைகள்

24.06.2001 உதயனில் பிரசுரிக்கப்பட்ட நவீன இலக்கியங்கள் பற்றிய கட்டுரையை வாசித்தீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் இலக்கியக் கட்டுரைகள் நூலில எல்லா வகை நவீன இலக்கியங்களுக்கும் விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. (89413)

**WESTERN UNION MONEY TRANSFER**

**வெஸ்டன் யூனியன் பணப் பரிமாற்றல்**

சகல நாடுகளிலிருந்து பணப் பரிமாற்றம் செய்வதற்கு யாழ்ப்பாணத்தில் நியமிக்கப்பட்ட ஒரே நிறுவனம்

**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்**

**212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
தொலைபேசி இல. 021-2024/5

மேலும் உள்நாட்டு, வெளிநாட்டுக்கான (Video cassettes) வீடியோ கசற் + Audio Cassettes துரிதகதியில் அனுப்புவதற்குத் தொடர்புகொள்ளவேண்டிய நிறுவனம்

**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்**

(C/17251)

## ஜூன் மாத நிவாரணம் வழங்க ஏற்பாடு

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்தோருக்கான ஜூன் மாதத்திற்குரிய நிவாரணப் பொருள்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை யாழ்.ப.நோ.கூ.சங்கம் மேற்கொண்டு வருகிறது.

நிவாரணப் பொருள்களை விநியோகிப்பதற்காக சங்கக்கிளைகளுக்குத் தற்போது பொருள்கள் அனுபபப்பட்டு வருகின்றன. தற்போது கடந்த மே மாதத்திற்கான நிவாரணப பொருள்கள் சங்கத்தின் கிளைகள் ஊடாக இடம் பெயர்ந்த மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

## வீதியோர மரங்களால் பஸ்களுக்குப் பாதிப்பு

யாழ்.காரைநகர் 786 இலக்கப் பாதையான மூளாய் வீதி, நவாலி வீதிப் பகுதிகளில் பூவரச மரங்களின் கிளைகள் அடர்த்தியாக வளர்ந்துள்ளதால் அந்த வீதிகளின் ஊடாகச் செல்லும் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை பஸ்களுக்குப் பெரும் இடையூறு ஏற்பட்டு வருவதுடன் அவற்றின் கண்ணாடிகளும் அடிக்கடி சேதமாகி வருகின்றன.

இதனால் இப்பகுதிப் பொது மக்களும் பிரதேச சபையினரும் பூவரச மரங்களின் கிளைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

உ
சிவமயம்
சிவகாமி அம்மன் துணை

# பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஆனி மாதம் 16 ஆம் நாள் நாளை (30-06-2001) சனிக்கிழமை காலை 7.25 மணிமுதல் 8.05 மணி வரையுள்ள கர்க்கடக லக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்,

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

எமது சிரேஷ்ட புத்திரி

**செல்வி தர்மராஜா சகிதா**

அவர்களுக்கு

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

பூப்புனித நீராட்டுவிழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

* **இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

**நல்வரவை நாடும்:**

**திரு.திருமதி தர்மராஜா (தருமு) குடும்பத்தினர்**
*அம்மன் வீதி, திருநெல்வேலி.*

சிவகாமி றேடர்ஸ்
**ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.**

(89540)

சிவகாமி அம்பாள்,
**கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.**

## வெங்காயச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளில் வெங்காயச் செய்கையை மேற்கொள்வதில் இம்முறை விவசாயிகள் அதிகளவில் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

இங்குள்ள பல தோட்டங்களில் விவசாயிகள் வெங்காயச் செய்கையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளதையும் அவதானிக்கமுடிகிறது. கடந்த தடவை இப்பகுதி விவசாயிகள் அதிகளவில் புகையிலைப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டபோதும் அது நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகி அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க147)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுந்தரம்மா சுப்பிரமணியம்

காரைநகர், மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரம்மா சுப்பிரமணியம் 28-06-2001 வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - லட்சுமி தம்பதிகளின மகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தையா, நடராசா, திருநாவுக்கரசு, சிவபாக்கியம், செல்லம்மா மற்றும் பார்வதி, சரஸ்வதி, மாணிக்கத்தியாகராசா, முத்துலிங்கம், தனபாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, ஏகாம்பரம் மற்றும் மனோன்மணி ஆகியோரின் மைத்துனியும் அன்னலட்சுமி, மகாலட்சுமி, பாக்கியலட்சுமி (கிராம அலுவலர் கந்தர்மடம், தெ.மே.J/104), ஸ்ரீஸ்கந்தராசா (முஸ்லிம் கலாச்சார அமைச்சு), யோகலட்சுமி (பிரான்ஸ்), நித்தியலட்சுமி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசரட்ணம், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் கனகசபாபதி, தனலட்சுமி, யோகராசா (பிரான்ஸ்), ஜெயராசசிங்கம் (கொழும்பு) ஆகியோரின் மாமியாரும், செல்வராசா, சுகந்தி (பிரான்ஸ்), ஜெயக்குமார், ஜெயந்தி (பிரான்ஸ்), சுகுமார், வத்சலா (பிரான்ஸ்), பிரேமதாசன், ஆனந்தி (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் சித்திரா (வவுனியா), சுரேஸ்குமார், அருந்ததி, ஸ்ரீலக்ஷ்மி, தர்மபுத்திரன், திருச்செல்வி (ஜேர்மனி), சோமேஸ்வரன், கலைச்செல்வி, முத்துலிங்கம், கலாராணி (ஜேர்மனி), மகேசன், கமலாம்பிகை (ஜேர்மனி), ஸ்ரீலக்ஷ்மன், சுகதா (ஒல்லாந்து), விமலசிங்கம், ஸ்ரீலக்ஷ்மி (கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியும், வினோதினி, நிசாந்தி, நிரோஜன், சாருஜன், ஜெருசன், ஜெருசிகா, அகிஷா (பிரான்ஸ்), திவாகர், திவ்யா (வவுனியா), அபிராமி, சரண்யா, கௌசிகன், அகீசன், அபிசானா, மதுசன், கவிசன், அனுசன், ஆரணி (ஜேர்மனி), விவக்ஸ் (ஒல்லாந்து), விதுஷிகா (கொழும்பு) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (29-06-2001) நண்பகல் 12.30 (பு.நே.) மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி வீதி,*
*40/4, புகையிரத கிழக்கு ஒழுங்கை,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

தகவல்:
**திருமதி பா.கனகசபாபதி**
(மகள்)
*G.S.104, கந்தர்மடம் தெ.மே.*
(C/17246)

## இராசசிங்கம் ஜெகதீஸ்வரி (பொட்டு)

சிறுப்பிட்டி மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற இராசசிங்கத்தின் மகள் ஜெகதீஸ்வரி (பொட்டு) 27-06-2001 புதன்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசசிங்கம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்பு மகளும், பத்மசிங்கம் (முரசுமோட்டை), தர்மசிங்கம் (வவுனியா), சுலோசனா (ஏழாலை), சுமதி (முரசுமோட்டை), ஜெயசிங்கம் (துணுக்காய்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராணி (முரசுமோட்டை), கலாவதி (வவுனியா), சிவஞானம் (முரசுமோட்டை), கிருஷ்ணகுமார் (ஏழாலை), லலிதா (துணுக்காய்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28-06-2001) வியாழன் பிற்பகல் 5 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*சிறுப்பிட்டி மேற்கு,*
*நீர்வேலி.*

தகவல்
**சரஸ்வதி** (தாய்)
**கிருஷ்ணகுமார்** (மருமகன்)
(89550)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
15 - 10 - 1952



ஆண்டவன் அடியில்
10 - 07 - 2000

## அமரர் கந்தையா யோகராசா

**திதி 29-06-2001**

அன்பிற்கும் பண்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமாய் இருந்து எங்களை நல்வழிப்படுத்திய எம் அன்புத் தந்தையே! எங்களுடன் காலமெல்லாம் வாழ்வீர் என எண்ணியிருக்க நொடிப் பொழுதில் காலன் உங்கள் உயிரைக் கவர்ந்து சென்றதேனோ? பேரோடும் புகழோடும் பெருமையாய் வாழ்ந்த உங்கள் நினைவுருவம் வருடம் ஒன்று சென்றாலும் எம் நெஞ்சங்களை விட்டு மறையாது...

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள், மைத்துனிமார்.**

*'மாணிக்க பவனம்'*
*தம்பாலை, அச்சுவேலி.*

(89551)

# இலங்கை சிறுபான்மையினரின் பிரச்சினைகள் குறித்து ஆராய சர்வதேச ஆணைக்குழு

## தென்னாபிரிக்க மாநாட்டில் கோரிக்கை விடுக்க முடிவு

கொழும்பு,ஜூன்29

தென்னாபிரிக்காவில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள இன உறவுகள் குறித்த மாநாட்டில், இலங்கையின் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய சர்வதேச ஆணைக்குழு ஒன்றை அமைப்பது குறித்து இலங் கையின் அரசசார்பற்ற அமைப் புகள் கோரிக்கை விடுக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் இலங்கையின் அரச சார்பற்ற அமைப்புகளின் சார்பில் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு இனக் கற்கை நெறிகளுக்கான சர்வதேச நிலையம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

வடக்கின் அரச சார்பற்ற அமைப்புக்களுடனும் கிழக்கின் சில பகுதிகளைச் சேர்ந்த அரசசார்பற்ற அமைப்புக்களுடனும் இணைந்து இந்த நிலையம் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை -

தென்னாபிரிக்காவில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள இன உறவுகள் குறித்த மாநாட்டின் மூலம் ஆக்கபூர்வமான முடிவுகள் கிட்டுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளதாக இலங்கையின் அரசசார்பற்ற அமைப்புகள் சுட்டிக் காட்டியுள்ளன.

அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகளால் நிறவெறிக்கும், இனவெறிக்கும், சாதியத்திற்கும் எதிராகக் குரல் எழுப்ப முடியுமா எனவும் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள இனக்கற்கை நெறிகளுக்கான சர்வதேச நிலையத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற இன உறவுகள் குறித்த மாநாடு எனும் கலந்துரையாடலிலேயே இது குறித்துச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க மாநாட்டுக்கு முன்னோடியாக ஈரான் தலைநகர் தெஹ்ரானில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு நாடு திரும்பியுள்ள இலங்கையின் அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளே இதனைத் தெரிவித்தனர்.

மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் சுதேசிகள் குறித்தோ சிறுபான்மை இனங்கள் குறித்தோ எதுவும் தெரிவிக்கப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

அரசாங்கங்கள் மட்டத்தில் மாநாட்டுக்காக மேற்கொள்ளப்படும் ஏற்பாடுகள் குறித்து அதிருப்தி வெளியிட்ட இலங்கையின் அரசசார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் ஐக்கிய நாடுகளின் ஆதரவில் முன்னர் கூட்டப்பட்ட இன உறவுகள் குறித்த சர்வதேச மாநாடுகளுக்கு ஏற்பட்ட கதி இந்த மாநாட்டுக்கும் ஏற்படக் கூடும் என எச்சரித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் ஆதரவில் 1970 இலும், 1980 களிலும் கூட்டப்பட்ட இன உறவுகள் குறித்த சர்வதேச மாநாடுகள் அவ்வேளை தென்னாபிரிக்காவில் நிலவிய இனவெறி அரசாங்கம் குறித்த சர்ச்சைகளால் தீர்மானங்கள் ஏதுமின்றி முடிவடைந்தன - திங்கட்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின்போது இலங்கையின் அரச சார்பற்ற அமைப்புகள் நினைவூட்டின.

பலஸ்தீனம் குறித்து இம்முறை நடைபெறவுள்ள மாநாட்டில் விசேடமாக ஆராயப்படவுள்ளதாகவும், இதேபோன்று புலம்பெயர்வு குறித்தும் புலம்பெயர்ந்து வாழ்பவர்கள் எதிர்கொள்ளும் இன உறவுகள் தொடர்பான நெருக்கடிகள் குறித்தும் இம்முறை டேர்பனில் நடைபெறவுள்ள மாநாட்டில் ஆராயப்படவுள்ளன.

தென்னாபிரிக்க மாநாட்டுக்கான முன்னோடி ஏற்பாடுகளை மேற்கொள்ளும்வேளை அரச சார்பற்ற அமைப்புகள் புறக்கணிக்கப்பட்டமை குறித்தும் ஈரான் மாநாட்டில் கலந்துகொள்வதற்கு ஈராக்கின் பிரதிநிதிகளுக்கு அனுமதி வழங்கப்படாமை குறித்தும் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டதுடன், கெடுபிடி யுத்த காலத்துக்குப் பின்னர் நிறவெறியின் ஆதிக்கப்போக்கை வெளிக்காட்டும் சம்பவங்களில் ஈராக் மீதான பொருளாதாரத்தடை மிக முக்கியமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## விவசாய சமுர்த்தி ஊக்குவிப்பாளர் விரைவில் நியமனம்

வலி.தென்மேற்கு,ஜூன்29

யாழ்.மாவட்டத்தில் விவசாய சமுர்த்தி ஊக்குவிப்பாளர் நியமிக்கப்படவுள்ளதாக யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் தெரிவித்தார்.

தற்போது சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களாக கடமையாற்றுபவர்களிடமிருந்தே விவசாய சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இதற்கான அனுமதியை சமுர்ததி அதிகாரசபை விரைவில் வழங்கவுள்ளதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

புதிதாகத் தெரிவு செய்யப்படுபவர்கள் யாழ்.மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கமநல கேந்திர நிலையத்திற்கும் நியமிக்கப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-185)

# ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்கு இம்முறை 2 லட்சத்து 26 ஆயிரம் பேர் தோற்றுவர்

கொழும்பு,ஜூன்29

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்கு சுமார் 2 லட்சத்து 26 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இம்முறை இப்பரீட்சைகள் இரண்டு பிரிவாக நடத்தப்படும். புதிய கல்வி சீர்திருத்தத்தின்படி மூன்று பாடங்களுக்கு மட்டும் தோற்றும் பரீட்சார்த்திகள் என்றும், 4 பாடங்களுக்கு மட்டும் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை என்றும் இரு பிரிவுகளாக நடத்தப்படும்.

மூன்று பாடங்களுக்கான பரீட்சைக்கு 1 லட்சத்து 87 ஆயிரம் பேரும், 4 பாடங்களுக்கான பரீட்சைக்கு 37 ஆயிரம் பேரும் தோற்றவுள்ளனர்.

பழைய பாடத்தின்படி நடத்தப்படும் 4 பாடங்களுக்கான பரீட்சை இம்முறை மட்டுமே நடத்தப்படும். 2002ஆம் ஆண்டு முதல் 3 பாடங்கள் மட்டுமே உயர்தர பரீட்சைக்கு இணைத்துக் கொள்ளப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஓகஸ்ட் 4ஆம் திகதி முதல் 28ஆம் திகதி நடைபெறும் இப்பரீட்சைக்கு மேலதிகமாக ஓகஸ்ட் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 'சாதாரண ஆங்கிலம்' என்ற பரீட்சையும் நடத்தப்படும். இப்பரீட்சைக்குத் தோற்றுவதன் மூலம் பெறப்படும் புள்ளிகள் பல்கலைக்கழக அனுமதிக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. பரீட்சார்த்திகள் விரும்பினால் மட்டுமே இப்பரீட்சைக்குத் தோற்றலாம் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை -

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையும் ஓகஸ்ட் 12ஆம் திகதி நடைபெறும் என்றும் -

இப்பரீட்சைக்கு 2 லட்சத்து 64ஆயிரம் மாணவர்கள் தோற்றவுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டப் புத்தகங்களின் அடிப்படையில் மட்டுமன்றி சமயக் கொள்கை ரீதியாகவும் தீர்ப்பை வழங்கியவர்

## நீதியரசர் பாலகிட்ணர் அஞ்சலிக் கூட்டத்தில் மட்டு.நீதிபதி

மட்டக்களப்பு, ஜூன்29

காலஞ்சென்ற நீதியரசர் கே.பாலகிட்ணர் இரக்க சிந்தையுடனும், இறைபக்தியுடனும் நீதிச் சேவையாற்றியவர். சட்டப்புத்தகங்களின் அடிப்படையில் மட்டுமல்ல சமயக் கொள்கைகளின் அடிப்படையிலும் தனது தீர்ப்பை வழங்கியவர். அதனால்தான் அவரின் தீர்ப்புக்கள் இளம் நீதிபதிகளுக்கு வழிகாட்டியாக இருக்கின்றன என்று மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.என்.இராமசந்திரன் தெரிவித்தார்.

ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் கே.பாலகிட்ணரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு மேல் நீதிமன்ற விசேட அமர்வின் போது நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இளம் சட்டத்தரணிகளுக்குச் சிறந்த ஆலோசகராகவும் விளங்கிய பாலகிட்ணர் வழக்குகளைத் துரிதமாக விசாரித்து தீர்ப்பை வழங்கியவர். அவரின் திடீர் மறைவு பேரதிர்ச்சியைத் தந்ததாக மேல் நீதிமன்ற நீதிபதி இராமச்சந்திரன் தெரிவித்தார்.

மாவட்ட நீதிபதி எஸ்.சொர்ணராஜ் பேசுகையில்; இலங்கையின் பல பாகங்களிலும் கடமையாற்றிய நீதியரசர் பாலகிட்ணர் கடமையாற்றிய இடங்களில் எல்லாம் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர் - என்றார்.

மட்டக்களப்புச் சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் கே.தங்கவடிவேல் உரையாற்றுகையில்; 1964ஆம் ஆண்டு நீதிச்சேவையில் சேர்ந்து கொண்ட பாலகிட்ணர் அனுராதபுரம், இரத்தினபுரி, புத்தளம், யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கல்முனை ஆகிய இடங்களில் நீதிபதியாகக் கடமையாற்றினார். மேல் நீதிமன்ற நீதிபதியாகப் பதவியுயர்வு பெற்ற அவர் 1982ஆம் ஆண்டு தொடக்கம் 1987ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றினார். 1987 இல் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராகக் கடமையாற்றிய பின்னர் அதன் தலைவராக இருந்து ஓய்வு பெற்றார்.

சமூக, சமய கலாசாரப் பணிகளில் ஈடுபட்டு வந்த அவரின் திறமையையும், நேர்மையையும் கருத்தில் கொண்டு வடக்கு-கிழக்கில் காணாமல் போனோர் பற்றி விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். மனித உரிமை ஆணைக்குழுவின் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

எத்தகைய துன்பதுயரங்களுடன் இருக்கின்ற வேளையிலும் முகங் கோணாது புன்சிரிப்புடன் அனைவருக்கும் உதவுபவர். 1978ஆம் ஆண்டு சூறாவளியால் சேதமடைந்த கொட்டடிப் பிள்ளையார் ஆலயத்தைப் புனரமைப்பதற்கு அவர் பெரிதும் உதவினார்.

இறைபக்தி, நீதிநேர்மை காரணமாக அவர் இறுதி நேரத்தில் கூட சந்தோசமான ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட வேளையிலேயே இவரின் உயிர் பிரிந்திருக்கிறது. அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போம் - என்றார்.

மேல் நீதிமன்ற அரச சட்டத்தரணி சசிமகேந்திரனும் உரையாற்றினார். (க-21)

SHAMROCK
2003 CHEMISTRY
INORGANIC
ஆரம்பமாகியுள்ளது.
Sat., Sun. 5 p.m.
Mr.T.BALACHANDRAN B.sc.
☆ 2003 கலை, வர்த்தகப் பிரிவுகள்
☆ Gr. 4 முதல் O/L வரை. (C/17252)

விற்பனைக்கு!
புறொயிலர் இறைச்சிக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.
விலை 150/=
இ.பரதன், வராகி கோயில் வீதி, கொக்குவில் மேற்கு.
(89564)

பாராட்டுதலும் நன்றிநவிலலும்
கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நீண்டகாலமாக சிரேஷ்ட விரிவுரையாளர்களாக எமக்கு சீரிய பணியாற்றிய
திருமதி ஜெயமலர் தியாகலிங்கம்
செல்வி நிர்மலாதேவி நல்லையா
ஆகிய இருவரும்
இலங்கை கல்வி நிர்வாகச் சேவை பதவியிலிருந்து மாறி இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் புகுந்து யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரியில் நற்பணியாற்ற இணைந்துள்ளார்கள்.
இந்நிலையில் பேரிய இழப்பை நாம் சந்தித்தாலும் அவர்களின் அரும் பணிக்கு சிரம் தாழ்த்தி நன்றி நவில்வதுடன் அவர்களை மனதார பாராட்டுகின்றோம்.
எங்கிருந்தாலும் அவர்கள் சிறப்புடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(89566) கோப்பாய் ஆசிரிய கலாசாலைச் சமூகம்.

கண்ணீர் அஞ்சலி
எமது கல்லூரி ஆசிரியர்
திரு.பே.பத்மாகரன்
அவர்களின் அன்புத் தந்தையார்
சவிரிமுத்து பேதுறுப்பிள்ளை பேரின்பநாதன்
அவர்களின் பிரிவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரிய வட்டம்,
யா/யாழ். மத்திய கல்லூரி.
(89567)

ராஜா யாழ்ப்பாணம்
9வேடங்களில் நடித்த அஜித்,
வசுந்துராதாஸ், நக்மா, மீனா மற்றும் பலர் நடிப்பில்
CITIZEN சிட்டிசன்
தினசரி 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00(பு.நே)
(C/17030)

லஷ்சுமி இணுவில்.
விஜயகாந்த்,லைலா, நாசர் நடிப்பில்
கள்ளழகர்
(ரீல்ஸ்)
S.T.R.பிலிம்ஸ் புதிய வெளியீடு.
இனிய பாடல்கள், சண்டை காட்சிகள் நிறைந்த படம்.
தினசரி காட்சிகள் : 10.30, 2.30 (ப.நே.)
(கடைசி வாரம்)
(89572)

நாகம்ஸ் சுன்னாகம்
விஜயகாந்த், மீனா நடித்த
சேதுபதி IPS
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30(புதிய நேரம்)
சனி, ஞாயிறு விசேட காட்சி 6.30 மணிக்கு
(89561)

# மரண அறிவித்தல்கள்

## சவிரிமுத்து பேதுறுப்பிள்ளை பேரின்பநாதன்

நவாலி கிழக்கு சின்னப்பா வீதியைச் சேர்ந்த சவிரிமுத்து பேதுறுப்பிள்ளை பேரின்பநாதன் அவர்கள் நேற்று (28-06-2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி அன்னபூரணம் பேரின்பநாதனின் அன்புக் கணவரும், பத்மாகரன் (ஆசிரியர் - யாழ்.மத்திய கல்லூரி), திருமதி சுகன்யா எட்வேட்ஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி றாஜினி பத்மாகரன், தவசிங்கம் எட்வேட்ஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், அன்ரனி டினேஷ்சின் (மாணவன் புனித பத்திரிசியார் கல்லூரி) பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (29.06.2001) வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு நவாலி சென். பீற்றேர்ஸ் தேவாலயத்தில் இடம்பெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கல்லுண்டாய் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சின்னப்பா வீதி,*
*நவாலி கிழக்கு,*
*மானிப்பாய்.*

(89559)

தகவல்:
பே.பத்மாகரன்
(மகன்)

## திருமதி சரஸ்வதி கனகசபை

(அச்சுவேலி)

அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் "ஆனந்தகிரி" கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி கனகசபை நேற்று (28.06.2001) வியாழக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லம்மா மயில்வாகனத்தின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற திருமதி சரசாம்பிகை பாலசிங்கத்தின் அருமைத்தாயாரும் திருமதி சாந்தாதேவி சுப்பிரமணியம் (U.S.A.), திருமதி விமலாதேவி வேலுப்பிள்ளை (கொழும்பு), காலஞ்சென்ற கருணாதேவி, திருமதி பத்மதேவி சத்தியகாந்தம் (கொழும்பு), ம.ஆலாலசுந்தரம் (U.S.A.) ஆகியோரின் சிறிய தாயாரும் குமுதினி (யா/கோப்பாய் மகா வித்தியாலயம்), லோகேந்தினி (ஆஸ்திரேலியா), நந்தினி, அசோக்குமார் (யா/போதனா வைத்தியசாலை), பவானந்தன் (ஆஸ்திரேலியா), வசந்தகுமார் (யா/மாநகரசபை) ஆகியோரின் பேர்த்தியும் விந்தனா, திருவேந்தன், தயாசாகரி, ஹம்சாநந் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2001) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருபாலை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

(89568)

தகவல்:
க.வசந்தகுமார்
(பேரன்)

# மாகாண மட்ட வலைப்பந்தாட்டம்: இறுதியாட்டத்தில் யாழ்.அணிகள்

திருகோணமலை,ஜூன்29

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையே திருகோணமலையில் நடைபெற்றுவரும் விளையாட்டுப் போட்டிகளில் 19 வயதுக்குட்பட்ட


யூனியன் கல்லூரி அணி


சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி

வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இறுதியாட்டத்துக்கு யாழ்.பாடசாலைகள் அணிகளே தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றன.

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் இந்த இறுதியாட்டத்தில் யூனியன் கல்லூரியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மோதுகின்றது.

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணியில் இடம்பெறுவோர்:-

இருப்பவர்கள் (இடமிருந்து வலம்):- சி.சுதர்சினி (பயிற்றுநர்), சோ.குமுதினி (தலைவர்), ச.சிவனேஸ்வரன் (அதிபர்), இ.சிந்துஜா (உப தலைவி), கு.விமலன், திரு.ச. சிவானந்தா (பொறுப்பாசிரியர்).

நிற்பவர்கள்:-

த.நிலானி, இ.மொறின்சாமினி, கு.விலாசினி, வை.பபிறறா சுபாசினி, அ.அனுசியா, அ.விமாலினி, பு.சுகன்யா, வீ.ராதிகா.

*யாழ்.யூனியன் கல்லூரியில் இடம்பெறுவோர்:-*

இருப்பவர்கள் - ம.மாலினி, திருமதி ஜெ.ஜெயதரன் (பயிற்றுநர்), தி.சுகிர்தா (உப தலைவர்), சு.புண்ணியசீலன் (அதிபர்), இ.அஜித்தா (தலைவர்), திருமதி க. நாதசொருபன் (பொறுப்பாசிரியர்).

நிற்பவர்கள்:-

வி.பிரியா, து.சியாமளா, கி.சிவகௌரி, சு.சைலஜா, ப.சர்மினி, க.சீனஜா, தே.துளசி, சி.பரீதா.

(உ-145)

---

*நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம்*

# அரசைக் கவிழ்த்ததும் புதிய கூட்டரசாங்கம்

## ஐ.தே.க. பேச்சாளர் கூறுகின்றார்

கொழும்பு,ஜூன்29

அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் ஐ.தே.க சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை, ஆளும் கட்சியின், சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலரின் ஆதரவுடன் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்றும் -

அரசு கவிழ்க்கப்பட்ட பின்னர், பிரேரணைக்கு ஆதரவு வழங்கிய சகல கட்சிகளும் இடம்பெறும் கூட்டரசாங்கம் ஒன்று அமைக்கப்படும் என்றும் -

ஐ.தே.கவின் பேச்சாளர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இத்தகவல்களை வெளியிட்டார்.

'பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை; நாட்டினதும், நாட்டு மக்களினதும் தேவைகளை இந்த அரசு பூர்த்தி செய்யத் தவறிவிட்டது' - என்ற இரண்டே வரிகளில் அடங்கியுள்ள குற்றச்சாட்டுடன் அனைத்து எதிர்க்கட்சிகளும் கூட்டாக இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன் வைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஜே.வி.பி. ஏற்கனவே ஜனாதிபதியால் ஏமாற்றப்பட்டுள்ளதாகவும் -

சிறுபான்மை அரசாக இருந்து கொண்டு, சுதந்திர ஆணைக்குழுக்களை நியமிக்கும் பிரேரணைகளை நிறைவேற்றுவதாக ஆளும் தரப்பு ஜே.வி.பியினருக்கு உறுதியளித்திருப்பது கேலிக்கூத்தாகும் என்றும்-

ரவூப் ஹக்கீம் பதவி நீக்கம் செய்யப்பட்டமை பல லட்சம் முஸ்லிம்களை அவமானப்படுத்தியிருப்பதால்; அவர்கள் அரசுக்கு ஆதரவாகச் செயற்படமாட்டார்கள் என்றும் -

அவர் மேலும் கூறினார்.(உ-ஒ)

## கைதான இளைஞர் வசாவிளான் தடுப்பு முகாமில்

யாழ்ப்பாணம்,ஜூன்29

கடந்த 23 ஆம் திகதிஅல்வாய் இன்பருட்டியில் வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்ட இளைஞர் தற்போது வசாவிளானிலுள்ள இராணுவத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்குப் படையினர் 'பக்ஸ்' மூலம் தகவல் அனுப்பியுள்ளனர்.

பருத்தித்துறை இன்பருட்டியைச் சேர்ந்த திருஞானசம்பந்தபிள்ளை தில்லைரூபன் (வயது 22) என்ற இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பவராவார். (க-4-6)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்29

புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய மாணவர்களது கல்வி மேம்பாடு உருவாக்கல் தொடர்பான - பெற்றோருக்கான - கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விசேட விருந்தினராக யாழ்.மாநகர முதல்வர் ந.ரவிராஜ் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

அத்துடன் அருட்திரு.என்.ஜே. இராஜநாயகம், கவிஞர் சோ.பத்மநாதன், மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி எம்.மரியதாசன் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். (உ-10)

*மன்னாரில் பாலியல் வல்லுறவு:*

# கைதான படையினரை நீதிமன்றில் ஆஜர் செய்யத் தேவையில்லை

## கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு,ஜூன்29

கடந்த மார்ச் மாதம் மன்னாரில் இரு தமிழ்ப்பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட படையினரை விசாரணைகளின் போது, மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யத் தேவையில்லை என்று கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி வழக்குத் தொடர்பாக மன்னார் நீதிமன்றத்தில் தன்னை ஆஜர் செய்தால், தனது உயிருக்குப் பாதுகாப்பில்லை என்று தெரிவித்து, கொழும்பு மேல் நீதிமன்றத்தில், கைதான 14 படையினரில் ஒருவரால் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த மனு மீதான விசாரணை நேற்று நடைபெற்ற போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (உ-ஒ-10)

## இரு பெண்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுவதால் அவர்களை வேறு ஓரிடத்துக்கு மாற்ற வேண்டும் என்று கோரி அந்தப் பெண்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ்.தவராசா மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவை ஆராய்ந்த நீதிவான் இரு பெண்களையும் வேறு பொலீஸ் நிலையத்துக்கு மாற்றுமாறு உத்தரவிட்டுள்ளார். (உ-3)

## சகோதரர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வும் சகோதரர் நால்வருக்கு - ஒரேயடியாக மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது இலங்கையின் சரித்திரத்தில் இதுவே முதல் தடவை எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## தே.ஐ.மு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லத்தில் நடத்தியுள்ளார்.

அந்தக் கூட்டத்தில் அந்த முன்னணியின் ஆதரவாளர்கள் எனத் தெரிவிக்கப்படும் 65 பேர் கலந்து கொண்டுள்ளனர்.

அங்கு பேரியல் அஷ்ரப், யு.எல்.எம்.மொஹிதீன், யு.எல்.எம்.ஹனிபா (மருதூர்கனி) ஆகியோர் முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரான ரவூப் ஹக்கீமை விமர்சித்து உரையாற்றினர்.

அதன் பின்னர் அங்கு விருந்து ஒன்றும் இடம்பெற்றுள்ளது. (உ-3)

## ஐம்பது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் -

மிகவும் வறுமை நிலையில் தமது குடும்பங்கள் அவஸ்தைப்படுவது பற்றிய தமது சோகக் கதைகளை அவர்கள் தம்மிடம் தெரிவித்ததாகவும் -

சட்ட விரோதமாக அவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் ஊடுருவியிருந்தாலும் கூட மனிதாபிமான முறையில் அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் -

அந்தச் செய்தியில் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ-3)

## நம்பிக்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கையில்லாப் பிரேரணையை முறியடித்து வெற்றி பெறுவோம் என்பதில் நாம் திடமாக இருக்கிறோம். இந்த அரசின் ஆட்சிக்காலம் 6 வருடம் வரை தொடரும் - என்று கூறினார்.

கொழும்பில் நேற்று நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில், நாட்டில் இன்று புரையோடிப் போயிருக்கும் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சகலரும் கட்சி வேறுபாடின்றி ஒன்றுபட வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார். (உ-3)

## மட்டக்களப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தப்பட்டிருந்த - பாவற்கொடிச் சேனையை சேர்ந்த - இளைஞர் ஒருவருக்கே பொதுமக்கள் முன்னிலையில் மரணதண்டனை வழங்கப்பட்டது.

புதன் பிற்பகல் கொக்கட்டிச் சோலைச் சந்தியில் வைத்து மற்றொருவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது.

இந்த இளைஞர் கடந்த வருடம் ஜூன் மாதம் அங்குள்ள ஆலய உற்சவம் ஒன்றின்போது குண்டுடன் புலிகளால் கைது செய்யப்பட்டவர் என்றும் -

புலிகளை இலக்கு வைத்தே இந்த இளைஞர் குண்டை எடுத்து வந்ததாகவும் -

விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. (உ-10)

## வீரர்கள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரங்கள் அமைச்சு, போட்டிகள் முடிவுற்றதும், போட்டிகளில் பங்குபற்றியவர்கள் கொழும்புக்கு இரு நாள்கள் சுற்றுலா செல்லவும் ஒழுங்குகளைச் செய்துள்ளது.

முன்னதாகக் கடந்த வாரத்திலும் வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகளில் பங்குபற்ற ஒரு தொகுதி மாணவ மாணவியர் திருகோணமலை சென்றிருந்தது தெரிந்ததே. (உ-ஒ)


துயாளன் வீடியோ அன் கொமினிக்கேசன்

மிக மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள





- பழைய, புதிய வீடியோ CD பிரதிகளை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
- உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்புகள்
- பக்ஸ் (FAX) வசதி
- தரமான போட்டோப் பிரதிகள்
- லமினேசன் (அடையாள அட்டை கவரிடுதல்)

உள்ளூர் இலக்கம்: 021-3476, 021-3429, 021-2061

வெளியூர் இலக்கம்: 0094-21-3476, 0094-21-3429, 0094-21-2061

*யாழ்.வீதி, மானிப்பாய்.*
*(மகளிர் பாடசாலை அருகாக)* (89514)

A/L 2002 ஒரு வருட மீட்டல் வகுப்பு
*தமிழ்* : குழந்தை
ஆரம்பம்: 30-06-2001 (2 மணி)
A/L 2001இற்குரிய வினா விடை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(89435)

கணக்கீடு
A/L 2002
சொத்து விற்பனை
ஆரம்பம்: நாளை 12.00 மணி
A/L 2003
தனி வியாபார முடிவுக்கணக்கு
ஆரம்பம்: நாளை 1.00 மணி
S.தவா
B.Com.(Hons)(Acc.Spl.)
வாணி கல்வி நிலையம்
சுன்னாகம்.
(89570)

கணக்கீடு
A/L 2003
தனி வியாபார முடிவுக் கணக்கு
ஆரம்பம்: நாளை 7.00 a.m.
S.தவா
B.Com.(Hons)(Acc.Spl.)
நிரு கல்வி நிலையம்
கோண்டாவில்.
(89571)

நாளை ஆரம்பம்
தமிழ்
திரு.குழந்தை
ஒரு வருட மீட்டல்
A/L 2002 (1 - 2மணி) A/L 2003 (12-1மணி)
*ஆரம்பம்:-* 30-06-2001
100 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதிகள் வழங்கப்படும்
விக்னா கல்வி நிறுவனம்
(89549)

கிறிஸ்தவ சமய சமூக ஆய்வு மன்றம்
சுன்னாகம் (C.I.S.R.S.)
கருத்தரங்கு
தலைப்பு: இலங்கையில் தமிழ்ப் பெண்களின் பிரச்சினைகளும், தீர்க்கும் வழிகளும்.
தலைமை: அருட்திரு. எ.எ.போல் (யாழ்ப்பாணக் கல்லூரி, அதிபர்)
கருத்துரை வழங்குபவர்: திருமதி கோகிலா மகேந்திரன் (எழுத்தாளர்) பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்
இடம் : கிறிஸ்தவ இறையியல் கல்லூரி, மருதனார்மடம், சுன்னாகம்.
காலம் : ஜூன் 30 ஆம் நாள் 2001 சனிக்கிழமை பி.ப. 3.30 (பு.நே.)
ஆசியுரை: அதிவண.கலாநிதி எஸ்.ஜெபநேசன் (தெ.இ.தி.பேராயர்)
உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
டாக்டர்(செல்வி) C.V.செல்லையா
இயக்குநர்.
(89565)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.